விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 தை 13 வியாழக்கிழமை (27.01.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 039

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ‘போரை வென்ற அனுபவம்’

# உலகுக்கு விளக்க மாநாடு!

## 54 நாடுகள் பங்கேற்கின்றன



(கொழும்பு)

பயங்கரவாதப்போரை வெற்றிகரமாக ஒழிப்பது தொடர்பில் இலங்கை இராணுவத்தினர் பெற்றுக் கொண்ட அனுபவம் குறித்து உலக நாடுகளுக்கு விளக்கும் முதலாவது கருத்தரங்கு எதிர்வரும் மே மாதம் 31ஆம் திகதி முதல் மூன்று தினங்களுக்கு கொழும்பில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறவுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய தெரிவித்தார். (16ஆம் பக்கம் பார்க்க)

## கிளி.யில் 2 பிரதேச சபைகளுக்கு கூட்டணியும் மனுத்தாக்கல்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைகளுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி இன்று வேட்பு மனுத் தாக்கல் செய்யவுள்ளதாக தெரியவருகிறது.

தமிழரசுக் கட்சியின் சார்பில் நேற்று தாக்கல் செய்யப்பட்ட மனுவில் ஏற்பட்ட தவறு காரணமாக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்று வேட்புமனுச் செய்யும் இறுதித் தினம் என்பதால் தமிழர் விடுதலைக் கூட்டணியும், தமிழரசுக் கட்சியினரும் இணைந்து வேட்பாளர்களை தெரிவு செய்யும் பணியை இரவிரவாக மேற்கொண்டதாகவும் தெரியவருகிறது. (எ-1)

## இலங்கையர்களை நாடுகடத்த சுவிஸ் தீர்மானம்

(கொழும்பு)

புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட இலங்கையர்களை நாடு கடத்துவதற்கு சுவிட்சர்லாந்து அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

புகலிடம் நிராகரிக்கப்பட்டவர்களை இலங்கைக்கு மீளவும் அனுப்பி வைப்பது குறித்து சுவிட்சர்லாந்து குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

வடக்கு கிழக்கு நிலைமைகள் சுமுகமடைந்துள்ளதாகவும். (16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரசுக் கட்சி சார்பில் போட்டி

## வல்வெட்டித்துறை நகர சபைக்கு சிவாஜிலிங்கம் முதன்மை வேட்பாளர்



(யாழ்ப்பாணம்)

தமிழரசுக்கட்சியின் சார்பில் வல்வெட்டித்துறை நகர சபைக்கு தான் முதன்மை வேட்பாளராக போட்டியிடுவதாக தமிழர் விடுதலைக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் சிவாஜிலிங்கம் தெரிவித்ததாவது,

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நவசமாச கட்சியுடன் இணைந்து எதிர்கொள்ளும் எண்ணம் கைவிடப்பட்டுள்ளது.

தமிழரசுக்கட்சி சார்பில் வல்வெட்டித்துறை நகரசபைக்கான தலைமை வேட்பாளராக நான் நிறுத்தப்பட்டுள்ளேன்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் இடதுசாரி முன்னணியுடன் நாம் (16ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.நிபுணர்கள் குழுவின் இலங்கை பயணம் இரத்து?

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் நிபுணர்கள் குழுவின் இலங்கை விஜயம் அத்தியாவசியமானதல்ல என அந்த அமைப்பு அறிவித்துள்ளது.

நிபுணர்கள் குழு இலங்கைக்கு கட்டாயம் விஜயம் செய்ய வேண்டும் என்ற அவசியம் கிடையாது. விஜயம் செய்தால் அது பயனுள்ளதாக அமையும் எனவும் ஐக்கிய நாடுகள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. இன்னர் சிற்றி பிரஸ் ஊடகம் வெளியிட்டுள்ள தகவல்களில் இந்த விடயம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை விஜயம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிவித்துள்ளது. விசாரணைகளின் போது இலங்கையின் பங்களிப்பை பெற்றுக் கொள்ள முனைப்பு காட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு விஜயம் செய்வதன் மூலம் பயனடைய முடியும் என்றபோதிலும் அதனை அத்தியாவசியமானதாக கருத முடியாது என ஐக்கிய நாடுகள் அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (ச-5)

## ஆணைக்குழு முன் சாட்சியமளிக்க அழைப்புக் கிடைத்தது

## ஆராய்கிறார் சந்திரிகா



(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிப்பது தொடர்பாக பரிசீலனை செய்துவருவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளதாக நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடகப் பேச்சாளர் லக்ஸ்மன் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ஜனாதிபதியால் நியமிக்கப் (16ஆம் பக்கம் பார்க்க)

EMERGENCY ALERTS
அவசர வேளையில்
தகவல் சொல்லுங்கள்
இன்றே #899# ற்கு அழைத்து
பதிவு செய்யுங்கள்
Dialog

## மீண்டும் மத்தியஸ்தத்துக்கு தயார்

## எரிக் சொல்ஹெய்ம் அறிவிப்பு

(ஒஸ்லோ)

புலம்பெயர் தமிழர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் தமிழர்கள் அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டு வரும் நாடுகடந்த தமிழீழ அரசினது உறுப்பினர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் இணக்கப்பாடுகளை ஏற்படுத்த முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அபிவிருத்தியில் ஆக்கபூர்வமான பங்களிப்பினை வழங்குவதற்கு நோர்வே விரும்புவதாக ஆங்கில ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியில் அவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு பக்கச் சார்பாக செயற்பட்டதாக இலங்கையிலிருந்து குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளது. அதில் உண்மையில்லை. (16ஆம் பக்கம் பார்க்க)



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான விஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# பெண் போராளி தடுத்து வைப்பு

விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த முன்னாள் பெண் போராளியொருவரை புனர்வாழ்வுக்கு அனுப்புமாறு நீதிமன்றம் பணித்துள்ள போதிலும் அதனைச் செய்யத் தவறிய சிறைச்சாலையின் பெண்கள் பிரிவு அத்தியட்சகருக்கு அவரின் செயலின்மைக்கு காரணம் காட்டுமாறு கொழும்பு நீதவான் நேற்று பணித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடையவராக இருந்தவர் என குற்றம் சாட்டப்பட்ட மேற்படி பெண்ணை விசாரணையின் பின்னர் புனர்வாழ்வுக்கு உட்படுத்துமாறு நீதிவான் பணித்திருந்தார்.

ஆயினும் சிறைச்சாலை அதிகாரிகள் இந்த அறிவுறுத்தலை உதாசீனம் செய்திருந்தமையை நீதவான் அறிந்துகொண்டார்.இதனால் சிறைச்சாலையின் பெண்கள் பிரிவு அத்தியட்சகர்,ஏன் நீதிமன்றக் கட்டளையை செயற்படுத்த தவறினார் என காரணம் காட்டுமாறு கட்டளை பிறப்பித்துள்ளார். (ச-5)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290

## கலந்துரையாடல் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலகத்தில் இன்று பிற்பகல் 2.30மணிக்கு நடைபெறவிருந்த புத்தசாசன நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஏனைய மத அலுவல்கள் மற்றும் ஆன்மிக வளர்ச்சி நிகழ்ச்சித் திட்டம் சம்பந்தமான ஆரம்பக் கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெறமாட்டாது என கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீ நிவாஸன் அறிவித்துள்ளார். (சு)

## சுயேட்சைக் குழு மனுத்தாக்கல்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு சுயேட்சைக் குழுவொன்று வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளதாக யாழ்ப்பாண உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

சாவகச்சேரி பிரதேச சபைக்கான தேர்தலில் போட்டியிடுவதற்காக அமரசிவம் செல்லையா தலைமையிலான சுயேட்சைக் குழுவே நேற்று மாலை 3.58மணிக்கு வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளது. (எ-1)

## பரிசளிப்பு விழா

ஈவினை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் செ.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் சிற்றி ஹொட்டல் பொது முகாமையாளர் த.ராஜ்குமார் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். (சு)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக கல்வி முதுமாணிப் பட்ட நெறிக்கு புதிய மாணவர்களைச் சேர்ந்துக் கொள்வதற்காக தகுதியுடைய ஆசிரியர்கள்,அதிபர்கள்,கல்வி அதிகாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்ப முடிபுத் திகதி எதிர்வரும் பெப்ரவரி 11ஆம் திகதி ஆகும்.

தெரிவுப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவுகள் இடம்பெறும்.மேற்படி கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பது தொடர்பாக தேசிய கல்வி நிறுவகத்தால் வெளியிடப்பட்ட விபரங்களையும் விண்ணப்பப்படிவ மாதிரிகளையும் யாழ்.வலயக் கல்வி அலுவலகத்திலும்,யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியிலும் பார்வையிட முடியும் என தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார்.

தேசிய கல்வி நிறுவக கல்விமாணிப் பட்ட நெறிக்குப் புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை தேசிய கல்வி நிறுவகம் கோரியுள்ளது.

தமிழ் மொழி மூல பிராந்திய நிலையங்கள் யாவற்றிலும் ஆரம்பக் கல்வி நெறியுடன் இடைநிலைக் கல்வி நெறியும் நடத்தப்படும்.

இடைநிலைக் கல்வி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமக்கு விருப்பமான பிராந்திய நிலைய இலக்கத்தைக் குறிப்பிட்டு விண்ண்ப்பிக்க முடியும்.

விண்ணப்ப முடிபுத் திகதி 31.01.2011 ஆகும்.விண்ணப்ப விபரங்களையும் விண்ணப்பப் படிவ மாதிரிகளையும் யாழ்.வலயக் கல்விப் பணிமனையிலும்,தேசிய கல்வியியற் கல்லூரியிலும் பார்வையிட முடியும் எனத் தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளைஅறிவித்துள்ளார் (சு)

# உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் வன்முறையற்ற விதத்தில் நடைபெறவேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

அரச அதிகாரிகள் நல்வழியைக் காட்டும் அதேவேளை வழிகாட்டிகளாகவும் இருக்க வேண்டுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கேட்டுக் கொண்டார்.

யாழ்.அரச செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்நாட்டில் இயங்கு சக்திகளாக இருப்பவர்கள் அரச அதிகாரிகளே.அரசினது திட்டங்களை செயற்படுத்தி வருபவர்களும் அவர்களே.

பொறுப்பு வாய்ந்த ஒவ்வொரு அரச அதிகாரிகளும் மக்களுக்கு நல்வழியைக் காட்டும் அதேவேளை நல்வழிகாட்டியின் முன்னோடிகளாகவும் விளங்க வேண்டும்.

குடாநாட்டில் அண்மையில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் நீதியான முறையில் வன்முறையற்ற விதத்தில் அமைதியாக நடைபெறவேண்டும். அதற்கு சகல தரப்பினரும் தமது ஒத்துழைப்பையும் ஒத்தாசையையும் வழங்க வேண்டும்.

மாவட்ட அரச செயலக கேட்போர் கூடத்தில் அமைச்சர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மாவட்டத்தின் ஒவ்வொர் செயலர் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மீள் குடியேற்றம் தொடர்பில் குறிப்பாக கண்ணி வெடிகள் அகற்றப்பட்ட போதிலும், மீள் குடியேற்றம் செய்வதிலுள்ள இடர்பாடுகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

கடந்த மூன்று மாத காலத்தில் குடா நாட்டில் நடந்த அசம்பாவிதங்கள் குறித்து ஒவ்வொரு பிரதேச செயலர் மற்றும் பிரதேச சபைச் செயலாளர்களும் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. (எ-1)

# ஹெலிகொப்டரை சுட முயன்ற புலி உறுப்பினருக்கு விளக்கமறியல்

இலங்கை விமானப்படையின் ஹெலிகொப்டர் விமானமொன்றைச் சுட்டுவீழ்த்த முயன்ற குற்றச்சாட்டில் கைதான விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினரை அவருக்கு எதிரான விசாரணைகள் முடியும்வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

குழந்தைவேலு ஸ்ரீ ரங்கன் எனும் பெயர் கொண்ட பிரஸ்தாப விடுதலைப் புலி உறுப்பினர் வவுனியாவில் வைத்து பயங்கரவாத தடுப்பு புலனாய்வுப் பிரிவுப் பொலிசாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவர் கடந்த 10வருடத்துக்கு முன்னர் திருகோணமலையின் உப்பாறு பிரதேசத்தில் எம்.ஐ.24ஹெலிகொப்டர் ஒன்றின் மீது ஏவுகணையொன்றைச் செலுத்தி அதனை சுட்டு வீழ்த்தும் முயற்சியை மேற்கொண்டவர் என்று தெரியவந்துள்ளது.

அதற்கு மேலதிகமாக பூநகரியில் அமைந்திருந்த இராணுவ கட்டளைத் தலைமையகம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் உள்ளிட்ட பல தாக்குதல்களில் அவர் சம்பந்தப்பட்டிருப்பதும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அந்த வகையில் அரசாங்கத்தின் கோடிக் கணக்கான பெறுமதி கொண்ட சொத்துக்களை சேதப்படுத்த அவர் பங்களித்திருந்ததாக பொலிசார் நீதிமன்றில் குற்றம் சுமத்தியிருந்தனர்.

அதனை கவனத்திற் கொண்ட நீதவான் விசாரணைகள் பூர்த்தியடையும் வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டார். (எ-1)

**STUDY IN UK**

IELTS இன்றி O/L உடன் UK செல்ல அரிய இறுதி வாய்ப்பு

- மிக விரைவில் லண்டன் செல்ல சகல ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (38 நாட்கள்)
- College, University அனுமதிகள் நேரடியாக பெற்றுத் தரப்படும்
- நீங்கள் வழங்கும் சகல பணத்திற்கும் அத்தாட்சிப்பத்திரம் வழங்குவோம்.
- யாழ். மாணவர்களுக்காக யாழில் உள்ளவரால் நேரடியாகச் செய்யப்படும் நம்பிக்கையான திருப்தி மிக்க சேவை
- நாம் குறிப்பிடும் காலத்தினுள் நீங்கள் UK செல்லாவிட்டால் உங்கள் சகல பணத்தினையும் மீளப் பெறலாம் (40நாட்கள்)

மொத்த செலவு 7 லட்சம் மட்டுமே

FEB, MAR IN TAKE

முதலில் எம்மைத் தொடர்பு கொள்ளும் 14 பேருக்கு நாமே கல்லூரிக் கட்டணத்தை செலுத்தி 2 நாட்களில் CAS NO. பெற்றுத் தரப்படும்

- தேவையான ஆவணங்களுடன் உடன் எம்மைத் தொடர்பு கொள்ளவும் (Passport, கல்வித்தகைமைச் சான்றிதழ்கள்)

"முயற்சி திருவினையாக்கும்"

தொடர்புகளுக்கு: B.Pirasanth 0779595871
EUROPEAN COLLEGE OF HIGHER STUDIES
315 1/2, Palaly Road, Parameswara Junction, Thirunelvely, Jaffna
(3583)

**செல்லா சினிமா**




ஆடுகளமா அசத்துறானய்யா... நம்மாளு...
காட்சி நேரம்: 10.30,2.30,6.30,9.30

## தவறிவிட்டது

கலாசாலை வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்ட சரவணை நகுலபாலன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.901894353V) பாடசாலை அடையாள அட்டை மற்றும் இதர ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் மருதனார்மடச் சந்திக்கும் கே.கே.எஸ். வீதி, கோண்டாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைத்து உதவவும். தொடர்பிற்கு:- 0770343999,0778090476 (3585)



ஜெய்குருதேவ்
ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் அவர்களின்

THE ART OF LIVING

நல்லாசியுடன் இந்தியா வாழும் கலை நிறுவனத்திலிருந்து வருகை தந்துள்ள வேத பண்டிதர்களும் சிவாச்சாரியர்களும் சேர்ந்து உலக அமைதிக்காக சிறப்பு யாகம் நடத்தவுள்ளனர்.

இடம்:- இந்து சமய பேரவை , பலாலி வீதி, கந்தர்மடம்
காலம்:- 28.01.2011 (வெள்ளிக்கிழமை)
நேரம்:- பிற்பகல் 3.45 மணிக்கு

வடமராட்சியில்...
இடம்:- தடங்கன் புளியடி முருகன் கோயில் கல்யாணமண்டபம் நெல்லியடி.
காலம்:- 29.01.2011 (சனிக்கிழமை)
நேரம்:- மாலை 4.00 மணிக்கு (இ)

அனைவரும் குடும்பத்துடன் கலந்து கொண்டு ஆசி பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
அனுமதி இலவசம்
தொ.பே: 0770474757, 0777222133, 0776622247, 0777740593, 0779492589

# இன்று ஒரு தகவல்

## கவனியுங்கள்

"நாம என்ன சொன்னாலும் அவன் காதிலேயே வாங்கமாட்டான் என்கிறான்" என்று சொல்வதுண்டு.

அது எப்படி காதில் வாங்காமல் இருக்கமுடியும்? காது எப்பொழுதும் திறந்தே இருக்கக் கூடிய ஒன்று தானே.

சிலபேர் பேசிக்கொண்டே இருப்பார்கள். நாமும் கேட்டுக் கொண்டுதான் இருப்போம்.

"அவர் என்ன சொன்னார்? திருப்பிச் சொல்" என்று கேட்டால் சொல்லத் தெரியாது.

காது சரியாகக் கேட்டாலும் நாம் பேசுவதை மற்றவாகள் சரியாக் கேட்கிறார்களா?என்பது சந்தேகம்தான்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஓர் உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது–கேட்பதென்பது வேறு, கவனிப்ப தென்பதுவேறு. அது Hearing இது Listening

கேட்பது தன்னிச்சையாக நடக்கக் கூடிய ஒரு செயல்.

ஒரு வீதியில் நடந்து போய்க்கொண்டிருக்கிறோம். எவ்வளவோ சத்தங்கள் நம்முடைய காதில் விழுந்து கொண்டிருக்கிறது. கார் போகும் சத்தம், பறவைகளின் சத்தம் போன்றவை.

ஆனால், கவனித்தல் என்பது நம்முடைய முழுமனதையும் செலுத்தி உன்னிப்பாகக் கேட்பது எத்தனையோ சத்தத்துக்கு நடுவில் தன் குழந்தை அழும் சத்தத்தை தாய் தெரிந்துகொள்ள முடிகிறது அல்லவா? அதுமாதிரி.

விபரம் தெரிந்தவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், கவனித்தல் (Listening) என்ற செயலில் 3 அம்சங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். முதலில் காதால் கேட்பது, இரண்டாவது கேட்டதைப் புரிந்துகொள்வது (Compreheud), மூன்றாவது என்ன புரிந்து கொண்டோம் என்பதைத் தெரிவிப்பது (Feedback)

ஒரு ஆசிரியர் வகுப்பில் பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார். வெறுமனே கேட்கும் குழந்தை ஒரு காதால் வாங்கி இன்னொரு காதால் விட்டுவிடும்.

ஆனால், கவனிக்கும் குழந்தை கேட்டதைப் புரிந்து கொள்ளும். என்ன விளங்கிக் கொண்டாய் என்று கேட்டால் பதில் சொல்லும்.

ஒரு புள்ளிவிபரக்கணக்கு என்ன சொல்கிறது தெரியுமா? ஒரு மனிதன் எழுதுவது மூலமாக 6 சதவீதம் அறிவை பெருக்கிக்கொள்கிறான். 19 சதவீதம் அறிவையும் பேசுவதன் மூலமாக 30 சதவீத அறிவையும் பெருக்கிக் கொள்கிறான். கவனிப்பது மூலமாக 45 சதவீத அறிவைப் பெருக்கிக் கொள்கிறான் என்கிறது புள்ளிவிபரம்.

கற்றலின் கேட்டல் நன்று என்று சொல்கிறார்கள் அல்லவா? அது இதுதான். கேள்விஞானம்தான் மிகவும் சிறந்தது என்கிறார் வள்ளுவர்.

அதாவது, கவனித்துக் கேட்கவேண்டும் அதுதான் முக்கியம். மற்றவர்கள் சொல்வதை நன்றாகக் கவனிக்க முடியாதபடிக்கு நாம் சில தடைகளை ஏற்படுத்திக் கொள்கிறோமாம்.

அல்லது நம்மையறியாமலே உண்டாகிறதாம். அந்தத் தடைகளைத் தாண்ட வேண்டும் அல்லது தகர்த்தெறிய வேண்டும் என்பது பெரியவர்கள் சொல்லும் யோசனை. அது என்ன தடைகள்? நமக்குத் தெரியாததை இவர் என்ன சொல்லிவிடப் போகிறார் என்ற நினைப்பு.

சொல்லி முடிப்பதற்கு முன்னரே குறுக்கே பேசுவது, மனத்தை அங்குமிங்கும் அலையவிடுவது இதெல்லாம் தான். ஆசிரியர் பாடம் நடத்தும் போது மாணவர்கள் அக்கறையகக் கவனிக்க வேண்டும். அப்பொழுதுதான் பரீட்சையில் சித்தியடைய முடியும்.

வீட்டுக்குள்ளே கணவன் சொல்வதை மனைவி கவனித்து கேட்கவேண்டும். மனைவி சொல்வதை கணவன் கவனித்துக் கேட்கவேண்டும். இல்லையெனில் குழப்பமாகிவிடும்.ஒரு அம்மா கோயிலுக்குப் போனார். சேலையில் முடிச்சு போட்டிருந்தார்.

"எதற்கு சேலையில் முடிச்சுப் போட்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார் ஒருத்தர்.

"என்னுடைய வீட்டுக்காரர் ஒரு கடிதத்தைப் பார்க்காமல் தபால் பெட்டியில் போடவேண்டும் என்றார். ஞாபகத்துக்காக முடிச்சுப் போட்டு வைத்திருக்கிறேன்" என்றார்.

"கடிதத்தை பெட்டியில் போட்டு விட்டீர்களா?" என்று கேட்டார் அவர்.அதெப்படி முடியும் ... அவர் கடிதத்தை என்னிடம் கொடுக்க மறந்து விட்டாரே என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# போரினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள் கையளிப்பு

(கிளிநொச்சி)

போரினால் பாதிக்கப்பட்ட உமையாள்புரம், தட்டுவன்கொட்டி கிராமத்திலுள்ள 40 மீனவர்களுக்கு கொழும்பு பிறக்ரீஸ் அக்ஷன் நிறுவனத்தால் வள்ளங்கள், வலைகள் என்பன வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தட்டுவன்கொட்டி கிராம உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், பிறக்ரீஸ் அக்ஷன் நிறுவனப் பணிப்பாளர், கிளிநொச்சி மீன்பிடித்துறைப் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட மற்றும் அனர்த்த முகாமைத்துவ இணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பிறக்ரீஸ் அக்ஷன் நிறுவனப் பணிப்பாளர் உரையாற்றுகையில்,

பயனாளிகளுக்கு 60% மானிய அடிப்படையிலும் 40% கடன் அடிப்படையிலும் இவ்வுதவிகள் வழங்கப் படுகின்றன.

பயனாளிகள் 40% கடனை மாதாந்தம் உரிய முறையில் திருப்பிச் செலுத்தும் பட்சத்தில் மேலும் பல உதவிகளை செய்யவுள்ளோம்.

நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் உரையாற்றுகையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இவ்வுதவிகள் கிடைப்பதையிட்டு மகிழ்வடைவதாகவும் தருமபுரம், கல்லாறு கிராம மக்களுக் கும் இவ்வாறான உதவி கள் கிடைக்கப்பெற வேண்டு மென்றும் இன்னும் வேறு நிறுவனங்கள் ஊடாக இவ்வாறான உத விகள் கிடைப்பதற்கு தான் ஆவன செய்வதாகக் குறிப்பிட்டார். (ஸ்ரீ)

# வடமராட்சிப் பிரதேசத்தில் விவசாய நடவடிக்கைகள் துரிதம்

(கரவெட்டி)

வடமராட்சிப் பிரதேசத்தில் விவசாய நடவடிக்கைகள் துரிதமாக இடம்பெற்று வருவதை காணக் கூடியதாக உள்ளது.

இம்முறை அதிகமான விவசாயிகள் புகையிலை, வெங்காயப் பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் சிறு தோட்டப் பயிர்ச் செய்கைகளும் நடைபெறுவதை காணக் கூடியதாக உள்ளது.

வடமராட்சிப் பிரதேசத்தில் மக்களின் விகிதாசாரப்படி அதிகளவான மக்கள் விவசாயத்தையே நம்பிவாழ்ந்துவருகின்றமை குறிப்பிடத் தக்கது. அத்துடன் சிறுதோட்டப் பயிர்ச் செய்கைகளும் நடைபெறுவதையும் காணக் கூடியதாக உள்ளது. (ஸ்ரீ-3-24)

# செயலமர்வு

வடமராட்சி வலய நட்புதவியாளர்களுக்கான மேற்பார்வை செயலமர்வு எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யா/ வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வுக்கு தத்தம் பாடசாலைகளில் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் பொறுப்பான ஆசிரியர்களை தவறாது அனுப்பிவைக்குமாறு வடமராட்சி வலயக்கல்வி பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 230 |
| உருளைக்கிழங்கு | 55 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 320 | 400 | 370 |
| தக்காளி | 70 | 80 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 |
| கோவா | 90-100 | 100 | 110 |
| கரட் | 120 | 140 | 140 |
| பூசணி | 30 | 40 | 35 |
| புடோல் | 90 | 120 | 100 |
| வாழைக்காய் | 40 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 200-250 | 240 | 300 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 100 |
| பாகற்காய் | 180 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 140 | 100 |
| கருணைக் கிழங்கு | - | 60 | 60 |
| பயற்றங்காய் | 180 | 200 | 200 |
| லீக்ஸ் | 100 | 160 | 120 |
| பீற்றூட் | - | 160 | 150 |
| கறிமிளகாய் | - | 300 | 300 |
| முருங்கைக்காய் | - | - | - |
| போஞ்சி | 160 | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100-150 | 170 | 180 |
| கீரை - 1 பிடி | 20-25 | 30 | 30 |
| தேசிக்காய் | 40 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 35-60 | 60-70 | 50 |

# இராசி பலன்

27.01.2011
(தை 13, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு
அட்டமி முற்பகல் 10.38 மணிவரை
சுவாதி பிற்பகல் 12.39 மணிவரை
இராகுகாலம் 2.06-3.36 மணிவரை
சுப நேரம் 8.06-9.36 மணிவரை
திருநீலகண்டர் ,தாயுமானவர் சுவாமிகள் குருபூசை ,அட்டமி-நவமி

**மேடம்** விருப்பங்கள் நிறைவேறும் நாள், வாழ்க்கைத்துணை வழியே உதவிகள் கிடைக்கும், விலகிச் சென்றவர்கள் விரும்பிவந்து சேருவர், கௌரவமான நாள்.

**இடபம்** நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், தொழில் மாற்றம் பற்றி சிந்தனை மேலோங்கும், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், தொழில் வளர்ச்சியுண்டு.

**மிதுனம்** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், முன்னேற்றத்திற்கு உதவிய சிலரை சந்திக்க இடமுண்டு.

**கடகம்** எடுத்த கருமங்கள் கைகூடும், புதிய பொறுப்புக்கள் வந்து சேரும், மனதில் நீண்டநாளாக இருந்த பாசம் குறையும், புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள்.

**சிங்கம்** வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும், நண்பர்கள் சொல்லும் ஆலோசனை உங்களுக்கு நல்லதாகத் தெரியும், இல்லத் தேவைகளை நிறைவு செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** இன்பங்கள் இல்லம் வந்து சேரும், தனவரவை அதிகரிக்க தகுந்த முயற்சிகள் எடுப்பீர்கள், வெளியுலகத் தொடர்புகள் அதிகரிக்கும், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்** இனம்புரியாத சிந்தனைகள் குடிகொள்ளும், பெரியோரை சந்திக்கும் வாய்ப்புண்டு, கொடுத்த வாக்கைக் காப்பாற்ற பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** வீட்டுப் பிரச்சினை நல்ல முடிவுக்குவரும், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், தொழில்ரீதியாக எடுத்த முயற்சிக்கு தொகை கேட்ட இடத்தில் கிடைக்கும்.

**தனுசு** பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள், பொருளாதார நிலை உயரும், குடும்ப மகிழ்ச்சி கூடும், கௌரவமான நாள்.

**மகரம்** உதிரி வருமானங்கள் வந்து சேரும், ஆரோக்கியத்திற்காக செலவு செய்வீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புக் கிடைத்து மகிழ்வீர்கள்.

**கும்பம்** ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டிய நாள், தொழில் ரீதியாக எடுத்த முய ற்சியில் தாமதம் ஏற்படலாம், பிறரை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மீனம்** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள், பிரயாணத்தில் கவனம் தேவை, தேவையற்ற மனப் பதற்றம் உருவாகும், பணப் பற்றாக்குறை ஏற்படலாம்.

வளவன்

# வீட்டின் யன்னலை உடைத்து உட்புகுந்த திருடன் மடக்கிப்பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு வீரபத்திரர் கோயிலடியில் உள்ள வீடொன்றின் யன்னலை உடைத்து வீட்டினுள் புகுந்த திருடனை அயலிலுள்ள உறவினர்கள் மடக்கிப் பிடித்தனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

வீட்டில் இருந்தவர்கள் வெளியே சென்ற சமயம் பார்த்து வீட்டின் யன்னலை உடைத்து திருடன் ஒருவன் உட்புகுந்துள்ளான். இச்சத்தத்தைக் கேட்ட அயலவர்கள் குறித்த திருடனை மடக்கிப்பிடித்து இருபாலை சந்தியிலுள்ள இராணுவ முகாமில் ஒப்படைத்தனர்.இராணுவத்தினர் இவரை விசாரணை செய்ததுடன் கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த திருடன் சுமார் 30 வயது மதிக்கத்தக்கவர் எனவும் குருநகரைச் சேர்ந்தவர் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேற்படி நபரிடம் பொலிஸார் விசாரணைகளை நடாத்தி வருகின்றனர். (ஸ்ரீ-2-7)

# குடிநீருக்காக ஏங்கும் கரவெட்டி பிரதேச மக்கள்

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேசத்தில் குடிநீர்ப் பற்றாக் குறையால் அப்பகுதியில் உள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தொடர்ந்தும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கரவெட்டிப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள துன்னாலை மத்தி, கரவெட்டி மத்தி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி கிழக்கு, கப்புதூ கிராமசேவையாளர் பிரிவில் உள்ள ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் குடிநீர்ப் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளனர்.

இவர்களின் இப்பிரச்சினை தொடர் கதையாகவே காணப்படுகின்றது.

அரச சார்பற்ற நிறுவனங்களினால் பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் அப்பிரதேச மக்களின் குடிநீர்ப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதுள்ளது.

எனவே உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-24)

# ஆயிரம் பாடசாலை திட்டத்திற்கு 34 கோட்டங்களிலுமிருந்து முன்னுரிமை அடிப்படையில் பாடசாலைகள் தெரிவு

(அல்வாய்)

வடமாகாணத்தில் ஆயிரம் பாடசாலை துரித அபிவிருத்தி திட்டத்தின் கீழ் முதலில் 34 கோட்டங்களில் இருந்தும் முன்னுரிமை அடிப்படையில் தலா ஒரு பாடசாலை வீதம் தெரிவு செய்யப்படவுள்ளதாக வட மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். அத்துடன் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட 94 பாடசாலைகளுக்கும் அபிவிருத்தியில் இடம்கிடைக்குமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இசுறு பாடசாலைகள் இத் திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டாலும் அப் பாடசாலைகளின் அபிவிருத்திப் பணிகள் சற்றுத் தாமதமாகவே மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-3-19)

## விளையாட்டு உத்தியோகத்தர் நியமனம்

(கரவெட்டி)

கரவெட்டிப் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தராக எஸ்.அநுராகாந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கோப்பாய்பிரதேச விளையாட்டுஉத்தியோகத்தராகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் கரவெட்டிப் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தராக கடமையாற்றிய பா.முகுந்தன் யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட பயிற்றுநராக இடமாற்றம் பெற்றுள்ளார். (ஸ்ரீ-3-24)

✠✠✠

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க பணிமனை விளையாட்டு உத்தியோகத்தராக என்.நாகராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் கடமையாற்றிய உதவி அரசாங்க பணிமனை விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.முகுந்தன் கிளிநொச்சி மாவட்ட தடகள பயிற்றுநராக இடமாற்றம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-24)

# ஆசிரியர்களுக்கான மெய்வல்லுநர் பெருவிளையாட்டுப் போட்டி

(அல்வாய்)

ஆசிரியர்களுக்கான அகில இலங்கை மெய்வல்லுநர் பெருவிளையாட்டு போட்டி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19, 20,21,22 ஆகிய தினங்களில் யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் 26 வயது தொடக்கம் 30 வயதுப்பிரிவு, 31 வயது தொடக்கம் 35 வயதுப்பிரிவு என இரு பிரிவுகளில் நடைபெறவுள்ளன.

இதில் ஆண், பெண் இரு பாலாரும் பங்குபற்றமுடியும்.

சுவட்டு நிகழ்ச்சிகளில் 100 மீற்றர்,200 மீற்றர்,400 மீற்றர்,800 மீற்றர்,1500 மீற்றர் , 4X100 மீற்றர் அஞ்சல் ஓட்டம், 4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டம் ஆகியனவும் மைதான நிகழ்ச்சிகளாக நீளம்பாய்தல் (26 வயது தொடக்கம் 30 வயது), உயரம் பாய்தல் ( 31 வயது தொடக்கம் 35 வயது வரை)

குண்டெறிதல் (36 வயது தொடக்கம் 40 வயது) , பரிதி வட்டம் வீசல் (41வயது தொடக்கம் 45 வயது வரை), ஈட்டி எறிதல் (46 வயதிற்கு மேற்பட்டோர்) ஆகியனவும் நடைபெறவுள்ளன.

பெரு விளையட்டுக்களில் கரப்பந்து இரு பாலாருக்கும் நடைபெறவுள்ளதுடன் வலைப்பந்து பெண்களுக்கு மட்டும் நடைபெறவுள்ளது.

துடுப்பாட்டம் ஆண்களுக்கு மட்டும் நடத்தப்படவுள்ளது.

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் ஆசிரியர்கள் தங்களது விண்ணப்பப் படிவத்தினை தத்தம் வலயக் கல்வி அலுவலக உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளருக்கு எதிர்வரும் 31 ஆம்திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

இதேவேளை கடந்த வருடம் நடைபெற விருந்த ஆசிரியர்களுக்கான வியைாட்டுப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது . (ஸ்ரீ-3-19)

## கலந்துரையாடல்

(கரவெட்டி)

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் தொடர்பான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலாளர் இரா. வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் பதிவு செய்த விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர் ஆகியோரையும் புதிதாக பதிவு செய்யவுள்ள கழகங்களையும் அன்றைய தினம் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-24)

✠✠✠

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கலந்துரையாடல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் கரவெட்டி பிரதேச செயலகத்தில் பதிவு செய்த விளையாட்டுக் கழகங்களில் தலைவர் , செயலாளர்களை கலந்துகொள்ளுமாறும் அத்துடன் புதிதாக இணையவுள்ள கழகங்களின் இரு பிரதிநிதிகளை அன்றைய தினம் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-24)

# விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதில் இன்று முற்பகல் 9 மணி முதல் 11 மணிவரை சுவாமியார் வீதி சிகிச்சை நிலையத்திலும் முற்பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை சுவாமியார் வீதி சூசையப்பர் கோவில் சந்தியிலும் வைத்து வழங்கப்படவுள்ளன.

அத்துடன் நாளை முற்பகல் 9 மணி முதல் 11 மணிவரை அதிப்பத்தி வளன்புரத்திலும் முற்பகல் 11.30 முதல் பிற்பகல் 1.30 வரை கடற்கரைவீதி வளன்புரத்திலும் வைத்து வழங்கப்படவுள்ளன.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## தொழிற்பயிற்சி நெறிகள் ஆரம்பம்

(அல்வாய்)

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய சமூகக் கற்கை நிலையத்தில் வடமராட்சி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் தொழிற் பயிற்சி நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

இதில் கணனிப் பயிற்சி நெறி,சிங்களம், மனை முகாமைத்துவம் ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப் பயிற்சி நெறிகளுக்கு ஏற்கனவே தங்கள் பெயர்களைப் பதிவு செய்தவர்கள் பாடசாலை அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்குமாறு வேலாயுதம் மகா வித்தியாலய அதிபர் ச.திரவியராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## யாழ்.செய்திகள்

## வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி

(பருத்தித்துறை)

புற்றளை மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் அனந்தீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-10)

# வடக்கின் மீளெழுச்சித் திட்டத்தின் கீழ் பாடசாலைக் கட்டடங்கள் புனரமைப்பு

(பருத்தித்துறை)

வடக்கின் மீளெழுச்சித் திட்டத்தின் கீழ் வடமராட்சி கல்விவலயத்துக்குட்பட்ட இரண்டு பாடசாலைகளின் கட்டடங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதற்கமைய பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய நூலகக்கூட்டமும் ஹாட்லிக் கல்லூரியில் பிரார்த்தனை மண்டபம் மற்றும் நூலகக் கட்டடமும் புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

இதற்காக பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்திற்கு ஒரு கோடி ரூபாவும் ஹாட்லிக் கல்லூரிக்கு 1 1/2 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

குறித்த கட்டட புனரமைப்பு வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஸ்ரீ-3-10)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபருக்கு ரூ.40 ஆயிரம் அபராதம்

தென்மராட்சி, வரணி குடமியன் கிராமத்தில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் 40 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 5 மாத சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தது.

குடமியன் கிராமத்தில் நேற்று முன்தினம் வீட்டில் கசிப்பு உற்பத்தி செய்தமை, உபகரணங்களை தன்வசம் வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கொடிகாமப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் நேற்று சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகம் கணேசராசா முன்னிலையில் மன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதபதி சந்தேக நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 40 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 5 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்ததுடன் கசிப்பு உபகரணங்களான சான்றுப் பொருளை அழிக்குமாறு நீதிபதி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ஸ்ரீ-3-24)

## 25ஆவது ஆண்டு நிறைவும் பரிசளிப்பு விழாவும்

நவாலி இந்து சமய விருத்தி சங்க முன்பள்ளியின் 25ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இச்சங்கத்தினால் நடாத்தப்பட்ட சைவ சமயப்பாட போட்டிப்பரீட்சையின் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.1.30 மணிக்கு யா/ நவாலி மகாவித்தியாலய மண்டபத்தில் நவாலி இந்து சமய விருத்திச் சங்கத் தலைவர் சு.மோகன முரளி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மானிப்பாய் பிரதேச சபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் சிறப்பு விருந்தினர்களாக சைவபரிபாலன சபை பொறுப்பாசிரியர் இரா. செல்வவடிவேல் , மானிப்பாய் கோவில்பற்று இந்துசமய விருத்திச் சங்க தலைவர் செல்வி இ.சுப்பையாப்பிள்ளை, முத்தமிழ்மணி ஜே.கோகலே ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-9)

# நீதியான, சுதந்திரமான தேர்தலை நடத்துவதற்கு ஆணையாளரும் பொலிஸாரும் ஆவன செய்யவேண்டும்

## ஐ.தே.க பொதுச் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவிருக்கின்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நீதியானதாகவும் சுதந்திரமானதாகவும் நடைபெறுவதற்கு தேர்தல்கள் ஆணையாளரும் பொலிஸாரும் உரிய வகையில் ஆவன செய்ய வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ள பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி அது அவர்களின் கடமையும் பொறுப்புமாகும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தச் சட்டம் மழுங்கடிக்கப்பட்டு சுயாதீன ஆணைக் குழுக்கள் அமைக்கப்படாத சந்தர்ப்பத்திலேயே மக்கள் தேர்தல்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இருப்பினும் ஐக்கிய தேசியக்கட்சி அதிகமான இடங்களைக் கைப்பற்றும் என்ற நம்பிக்கை வலுப்பெற்றிருப்பதாகவும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில்,

நடைபெறவிருக்கின்ற உள்ளூராட்சித் தேர்தல்களைப் பொறுத்தவரையில் ஐக்கிய தேசியக்கட்சியானது வடக்கு -கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் போட்டியிடுகின்றது.

இம்முறை தேர்தல்களில் நாம் அதிகமான இடங்களைக் கைப்பற்றுவோம் என்ற நம்பிக்கையுள்ளது. அந்த வகையில் நடைபெறவிருக்கின்ற உள்ளூராட்சித் தேர்தல்கள் நீதியானதும் சுதந்திரமானதாகவும் அமைய வேண்டும் என விரும்புகிறோம்.

கடந்த காலங்களில் நடைபெற்ற எந்தவொரு தேர்தலும் நீதியானதாகவோ சுதந்திரமானதாகவோ நடைபெறவில்லை என்பதை அறிந்துள்ளோம்.

அரச சொத்துக்கள் பலவந்தமாக பயன்படுத்தப்பட்டமையும் தேர்தல் சட்டங்கள் மீறப்பட்டு தேர்தல்கள் ஆணையாளரது அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படாமை ஆகியவற்றையும் மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர்.

எனவே இனியும் அவ்வாறு நடவாதிருக்கும் வகையில் தேர்தல்கள் ஆணையாளரும் பொலி ஸாரும் தமது கடமைகளை சரிவரச் செய்ய வேண்டும். (ஸ்ரீ-2)

# அரசின் பொருளாதார முகாமைத்துவ குறைபாடே பொருட்களின் விலையேற்றத்துக்கு காரணம்

## ரவி கருநாயக்க எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் பொருளாதார முகாமைத்துவ செயற்பாட்டில் காணப்படும் திறமையின்மையே அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வுக்கு காரணமாகும்.

வெள்ளம் ஏற்பட்டதால் மரக்கறிகளின் விலைகள் அதிகரிக்கும் என்பதனை ஏற்க முடியாது என்று ஐக்கிய தேசிய கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

அண்மைய வெள்ளப்பாதிப்பு காரணமாக மரக்கறிகளின் விலைகள் அதிகரிக்கப்படலாம் என்று அமைச்சர்கள் சிலர் தெரிவித்துள்ளமை தொடர்பில் குறிப்பிடுகையிலேயே ரவி கருணாநாயக்க எம்.பி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது,

அரசாங்கம் உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் பல சபைகளுக்கு தேர்தலை நடத்தாமல் இருக்கின்றது. அதற்கு காரணமாக உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் கூறப்படுகின்றன.

ஆனால் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் என்ற போர்வையில் அரசாங்கம் அதிகமான மாநகர சபைகளுக்கு தேர்தலை நடத்தாமல் உள்ளது.

உதாரணமாக நுவரெலியாவிலும் பதுளையிலும் உலக கிண்ண கிரிக்கெட் போட்டிகள் நடைபெறுகின்றனவா? இல்லை.

இதேவேளை அரசாங்கத்தினால் அத்தியாவசிய பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்த முடியவில்லை.

முட்டை மற்றும் தேங்காயின் விலை உயர்வை அரசாங்கத்தினால் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளது. அரசாங்கத்தின் பொருளாதார முகாமைத்துவத்தில் காணப்படுகின்ற திறமையற்ற தன்மையே இந்த நிலைமைக்கு காரணமாகும்.

வெள்ளம் ஏற்பட்டதன் காரணமாக மரக்கறிகளின் விலைகள் அதரிகரிக்கும் என்று கூறப்படுவதை ஏற்க முடியாது. கடந்த காலங்களில் ஐக்கிய தேசிய கட்சி நாட்டை ஆட்சி செய்து கொண்டிருந்தபோதும் வெள்ளப்பெருக்குகள் ஏற்பட்டன.

ஆனால் அக்காலத்தில் பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

ஆனால் தற்போதைய அரசாங்கத்தினால் ஏன் பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்த முடியவில்லை என்று கேள்வியெழுப்புகின்றோம்.

வெள்ளத்தை காரணம் காட்டாமல் அரசாங்கம் பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். (ஸ்ரீ-2)

# கல்வி நிர்வாக சேவையின் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கான வயதெல்லையை நீடிக்க கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை கல்வி நிர்வாக சேவை மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான உச்ச வயதெல்லையை நீடிக்குமாறு கல்வியமைச்சரிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேற்படி கல்வி நிர்வாக சேவைக்கு விண்ணப்பிப்பதற்கான வயது எல்லை 45 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது.

அதாவது 30-45 வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரைமேவிண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

முன்னொரு போதுமில்லாத இவ் உச்ச வயதெல்லையை நீடிக்குமாறு தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம், கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தனவிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

திறந்த போட்டிப் பரீட்சைக்கான வயதெல்லை தொடர்ந்து 30 வயதாக இருக்கும் போது மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு மட்டும் 45 ஆக உச்ச வயதெல்லையை வைத்து மட்டுப்படுத்துவது பொருத்தமானதாக இல்லை.

இதனால், ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்படுகின்றனர். மேற்படி பரீட்சை கிரமமாக நடைபெற்று வருமாகவிருந்தால் இவ் உச்ச வயதெல்லை ஏற்புடையதாக இருந்திருக்கும். ஆனால், நடைமுறை அப்படியில்லை.

கடந்த பல வருடங்களாக இலங்கை கல்வி நிர்வாக சேவை மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை நடாத்தப்படவில்லை.

இதனால் கல்விப்புலத்தில் மிகையளவு கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. குறிப்பாக தமிழ்பேசும் அதிகாரிகள் மிகவும் குறைவாக உள்ளனர்.

இதற்கு மேலாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கடந்த 10 வருடங்களாக இலங்கை கல்வி நிர்வாக சேவை 3ஆம் தரப்பதவிகளை அலங்கரிப்பவர்கள் அனைவரும் ஆசிரியர் சேவைகளைச் சேர்ந்தவர்களே ஆவர்.

வடக்கு-கிழக்கில் உதவிக் கல்விப் பணிப்பாளர்களாக 10 வருடங்களாகப் பணியாற்றுவோரில் ஒரு சிலரைத் தவிர அனைவரும் 45 வயதுக்கு மேற்பட்டவர்களே.

கடந்த காலங்களில் 2அல்லது 3வருடங் கள் பதில் கடமையாற்றியோரை நிரந்தர சேவைக்குள் உள்ளீர்த்திருந்தீர்கள்

ஆனால், வட- கிழக்கில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றுவோர் இன்னும் நிரந்தரமாக்கப்படாத துர்ப்பாக்கிய நிலை நிலவுகிறது.

அவர்களுக்கும் இவ் வயதெல்லை உச்சப் பாதிப்பாக இருக்கின்றது.மேலும் பல்லாயிரக் கணக்கான சிரேஷ்ட ஆசிரியர்கள் தோற்றுவதற்குரிய ஒரேயொரு கல்வி நிர்வாக சேவை பரீட்சையான மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை இம்முறை 45 வயதுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருப்பது பொருத்தமல்ல.

எனவே, உச்ச வயதெல்லையை நீடிக்குமாறு வேண்டுகிறோம்.

(ஸ்ரீ-2)

# மண்சரிவு அபாயமுள்ள 670 இடங்கள் அடையாளம்

(கொழும்பு)

நாட்டில் ஐந்து மாவட்டங்களில் மண்சரிவு அபாயம் உள்ள 670 இடங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவன மண்சரிவு ஆய்வு மற்றும் சேவைகள் பிரிவுத் தலைவர் ஆர். எம். எஸ்.பண்டார தெரிவித்துள்ளார்.

அதற்கமைய கண்டியில் 247 வீடுகளில் இருந்தும் மாத்தளையில் 160 வீடுகளில் இருந்தும் மக்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வெள்ள அனர்த்தம் குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

மாத்தளை மாவட்டத்தில் குடாரத் தொட்டி, மவுசாகெலை போதி கொட ஆகிய பகுதிகளில் உள்ள 57 வீடுகளில் இருந்து கடந்த 24 ஆம் திகதி மக்கள் அகற்றப்பட்டனர். இவர்களின் வீடுகள் விரிசல் உருவாகி உடை ந்து வருகின்றன. மாத்தளை லக்சல வீதியும் மண்சரிவுக்குட்பட்டுள்ளது.

பதுளையிலும் மண்சரிவு அபாயம் உள்ள இடங்களில் இருந்து மக்களை மக்களை அகற்ற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தில் 447 இடங்களில் ஆய்வு நடந்தினோம். 247 இடங்களில் இருந்து மக்கள் அகற்றப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# கிளி.முல்லை, மன்னார் மாவட்டங்களில் ஜே.வி.பி.யினர் வேட்புமனுத்தாக்கல்

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் உள்ள உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் நேற்றுக் காலை 10.15 மணிக்கு வேட்புமனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இதில் மக்கள் விடுதலை முன்னணி சார்பாக இராமலிங்கன் சந்திரசேகரனும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் எம்.மோகன் ஆகியோர் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தனர்.


அதேபோல் நேற்று மதியம் ஒரு மணியளவில் கிளிநொச்சி மாவட்டத்திற்கான வேட்பு மனுத்தாக்கல் நடைபெற்றது.

இதில் கிளிநொச்சி மாவட்டத்திற்காக மக்கள் விடுதலை முன்னணி சார்பாக லலித் குமாரும் அவர் தலைமையின் கீழ் இக் கட்சியில் உள்ள வேறு உறுப்பினர்களும் வேட்பு மனுத்தாக்கல் செய்தனர்.

அடுத்ததாக நேற்று மாலை 4 மணிக்கு மன்னார் மாவட்டச் செயலகத்திலும் மக்கள் விடுதலை முன்னணி சார்பாக வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டது. (ஸ்ரீ-2)







யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் கால்கோள் விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தரம் 1 மாணவர்களை தரம் 2 மாணவர்கள் கைலாகு வழங்கி வரவேற்பதையும் ஓய்வுபெற்ற உப அதிபர் திருமதி நா.கந்தசாமி உரையாற்றுவதையும் அமரர் கந்தசாமி ஞாபகார்த்த மண்டபத்தினை அவரது சகோதரர் ஆ.சிவராசா திறந்து வைத்து படத்தினை திரை நீக்கம் செய்வதனை படங்களில் காணலாம்.

# ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவிற்கு எதிராக அமெரிக்கா ஒரு போதும் செயற்படாது

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராகவோ இலங்கை இராணுவத்திற்கு எதிராகவோ அமெரிக்கா ஒரு போதும் செயற்படாது.

போலியான போர் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் கடப்பாடு இலங்கைக்குக் கிடையாது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையைத் துண்டாட சர்வதேச பிரிவினைவாத சக்திகள் பல வழிகளில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. அவை அனைத்திற்கும் மிக விரைவில் முற்றுப் புள்ளி வைக்கப்படும் எனவும் அவ் இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர கூறுகையில் ,

தனிப்பட்ட விஜயமொன்றை மேற் கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமெரிக்கா சென்றுள்ளார்.

இவ்விஜயம் தொடர்பாக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பல செய்திகள் வெளி வந்த வண்ணம் உள்ளன. அத்தோடு இலங்கைக்கு எதிராக செயற்படும் சர்வதேச பிரிவினைவாத சக்திகள் தமது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள முயற்சி செய்கிறது. போலியாக தயாரிக்கப்பட்ட போர்க் குற்ற ஆதாரங்களை முன்வைத்து ஜனாதிபதியை கைது செய்யவும் சில பிரிவினைவாத சக்திகள் அமெரிக்காவில் செயற்படுவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

மேலும் ஐரோப்பிய நாடுகளில் ஜனாதிபதியின் வருகையை கண்டித்து பல போராட்டங்களையும் முன்னெடுத்துள்ளனர்.

இலங்கைக்கு எதிரான இம்முயற்சிகள் அனைத்துமே ஒரு போதும் வெற்றியளிக்கப் போவதில்லை. அமெரிக்காவை பொறுத்த வரையில் இலங்கைக்கு எ[illegible]ராக ஒரு போதும் செயற்படாது என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

எனவே, அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதொடர்பில் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றார்.(ஸ்ரீ-2)

# அ'புரம் சிறைச்சாலையில் மீண்டும் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

சிறை அதிகாரியை கைது செய்யுமாறு கோரி அநுராதபுரம் சிறைச்சாலைக் கைதிகள் நேற்று மற்றுமொரு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்ற மோதல் சம்பவத்தின் போது 3 கைதிகளை சுட்டுக்கொன்றதாக கூறப்படும் சிறை அதிகாரியை கைது செய்யுமாறு கோரி அநுராதபுரம் சிறைக் கைதிகள் மற்றுமொரு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இக் கைதிகள் எந்த ஆகாரமுமின்றி கூரை மீதேறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் மூன்று கைதிகள் பலியாகியுள்ளதுடன் 25 பேர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# இரசாயனவியல் - எமது வாழ்வு, எமது வருங்காலம் 1

இரசாயனவியலானது உலகளாவிய ரீதியில் ஏற்படும் பல சவால்களை எதிர் கொள்வதில் மிகமுக்கிய பங்கு வகிக்கின்றது. இன்றைய காலத்தின் தேவைகளான புதியவகை சக்தி மூலங்களை உருவாக்குதல், காலநிலை மாற்றங்களை புரிந்துகொள்ளல், நிலம், நீர், வளி என்பவற்றை உள்ளடக்கிய் நச்சுத்தன்மையற்ற சூழலை உருவாக்குதல் போன்றவற்றிற்கு இரசாயனவியல் அறிவு வேண்டப்படுகிறது. திண்மங்கள், திரவங்கள், வாயுக்கள் ஆகிய சடப்பொருட்கள் யாவும் இரசாயன மூலகங்கள் அல்லது அவற்றின் சேர்வைகளால் ஆனவை. அத்துடன் ஆழ்ந்துநோக்கினால் உயிர் வாழ்வதற்குரிய எல்லாச் செயற்பாடுகளும் இரசாயனத் தாக்கங்களால் கட்டுப்படுத்தப்படுகின்றன. இந்நிலையில் இரசாய னவியலின் முக்கியத்துவத்தை பொதுமக்களுக்கு எடுத்துக் காட்டுதல் மிகப் பெரிய தேவையாகும்.

2011ஆம் ஆண்டு இரசாயனவியலாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். ஆம்! ஐக்கிய நாடுகள் சபையானது 2011 ஆம் ஆண்டைச் சர்வதேச இரசாயனவியல் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. உண்மையில் இந்தப் பிரகடனத்திற்கு முக்கிய காரண கர்த்தாக்கள், தூய மற்றும் பிரயோக இரசாயனத்திற்கான சர்வதேச ஒன்றியம் (IUPAC) உம் கல்வி, விஞ்ஞானம், கலாசாரத்திற்கான ஐக்கிய நாடுகள் அமைப்பு (UNESCO) உம் ஆகும்.

கலாநிதி யசோதா பிரபாகர்,
இரசாயனவியற்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

இதற்கு இரசாயன ஆர்வலர்களிடமிருந்து பெருவரவேற்பு கிடைத்துள்ளது. முன்பும் ஐ.நா.சபையானது வெவ்வேறு துறைகளுக்கு சர்வதேச ஆண்டுகளை அறிவித்துள்ளது. சமாதான (Peace) ஆண்டாக 1986 உம் எழுத்தறிவு (Literacy) ஆண்டாக 1994 உம் பௌதீகவியல் (Physics) ஆண்டாக 2005 உம் பிரகடனப்படுத்தப்பட்டன. இந்த வருடம் இரசாயனவியலுக்குரியதாகும். சர்வதேச இரசாயனவியல் ஆண்டு "இரசாயனவியல் - எமது வாழ்வு, எமது வருங்காலம்" என்னும் தொனிப்பொருளில் கொண்டாடப்படும். இதன் ஆரம்பநிகழ்வானது பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் இம்மாதம் 27, 28ஆம் திகதிகளில் பிரமாண்டமாகக் கொண்டாடப்படவுள்ளது. இரசாயனவியல் ஆண்டின் நிகழ்வுகள் உலகளாவியதாகவும், நாடளவியதாகவும், பிரதேச ரீதியாகவும் நடாத்தப்படவுள்ளன.

**இவ்வாண்டானது இரசாயனவியலின் அரும்பெரும் சாதனைகளை உலகளாவிய ரீதியில் கொண்டாடும் ஆண்டாக இருக்க வேண்டும் என்று ஐ.நா.வின் 63வது பொதுக்கூட்டத்தில் ஏற்பாடாகியுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வானது பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் இன்றும் நாளையும் கொண்டாடப்படவுள்ளது.**

2011 C CHEMISTRY
International Year of CHEMISTRY 2011

இலங்கையில் இலங்கை இரசாயனவியற்கழகத்தில் (Ichemc) தேசிய செயலகமொன்று உருவாக்கப்பட்டு நாடளாவிய ரீதியில் விழாக்களை நடாத்துவதில் முன்னின்று செயற்பட்டு வருகின்றது. பாரிஸில் ஆரம்பநிகழ்வுகள் இடம்பெறும் அதேவேளை இலங்கை இரசாயனவியற் கழகமானது சிறிமாவோ பண்டாரநாயக்கா ஞாபகார்த்த கண்காட்சி மண்டபத்தில் (BMICH இன் புதிய கட்டடப் பகுதி) இம்மாதம் 27 முதல் 30ஆம் திகதி வரை இரசாயனவியலில் விநோதங்கள் எனும் தலைப்பில் ஒரு கண்காட்சியை ஒழுங்கு செய்துள்ளது. இதன் ஏனைய செயற்பாடுகளாக கட்டுரை எழுதுதல் மற்றும் சித்திரம் வரைதல் போட்டிகள், நினைவு முத்திரை வெளியிடல், புலமைப்பரிசில்கள் வழங்கல், நடமாடும் பரிசோதனைக் கூடங்கள் ஏற்படுத்தல், பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விவாதப் போட்டிகள் நடாத்துதல், பாடசாலைகளுக்கிடையிலான புதிர்ப்போட்டி, மாயாஜால வித்தை போன்றன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

## 2011 ஆம் ஆண்டானது சர்வதேச இரசாயனவியல் ஆண்டாக ஐ.நா.வினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் இரசாயனவியலின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்துவதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இரசாயனவியற்துறை பல நிகழ்வுகளை ஒழுங்கு செய்துள்ளது. இரசாயனவியல் பற்றிய ஆக்கக் கட்டுரைகளை வடமாகாணத்தில் இயங்கும் பத்திரிகைகளில் பிரசுரித்தல், க.பொ.த உயர்தரத்தில் கல்விகற்கும் மாணவர்களுக்குரிய இரசாயனப் பரிசோதனைகளடங்கிய இறுவட்டு (CD) ஒன்றை வெளியிடல், இப்பரிசோதனைகளை நேரில் காண்பதற்கு மாணவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்தல், விரிவுரையுடன் செய்து காட்டுதல் (Lecture Demonstration) என்பன இவ்வருடத்தில் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

சர்வதேச இரசாயனவியல் ஆண்டின் (2011) முக்கிய இலக்குகளாவன.

1) உலகத்தின் தேவைகளை நிவர்த்தி செய்வதில் இரசாயனவியலின் முக்கியத்துவத்தை பொதுமக்களை உணரச்செய்தல்.

2) சிறுவர்கள் மாணவர்கள் மத்தியில் இரசாயனவியலில் சிரத்தையை ஊக்குவித்தல்.

3) இரசாயனவியலின் ஆக்கபூர்வ எதிர்காலத்திற்கான ஆர்வத்தை ஏற்படுத்தல்


4) மேரி கியூரி அம்மையார் நோபல் பரிசு பெற்றதன் நூற்றாண்டு விழாவையும் இரசாயனக் கழகங்களின் சர்வதேச அமைப்பு உருவாக்கிய நூற்றாண்டு விழாவையும் கொண்டாடுதல்.

(வளரும்)



# கள்ளிக்காட்டு

**26**



**கவிப்பேரரசு வைரமுத்து**

கலப்பை-மம்பட்டி-கொத்து-பண்ணருவா - கோடாலி வாச்சாத்து- கடப்பாரை போன்ற தளவாடங்களே சொல்லும், இன்னைக்கு இன்ன ஆளுக்கு இன்ன வேலை என்று.

அம்பலக்கல்லில் மேல்துண்டு போர்த்தி, மாடுகளோடு குத்த வைத்து உட்கார்ந்து விடிவதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார் பேயத்தேவர்.

அவர் நினைத்தபடியே - ஒரு பெருங் கொண்ட கலவரத்தை ஏற்படுத்தக்கூடிய ஏற்பாடுகளோடு அவர்களும் வந்து சேர்ந்தார்கள்.

"எவன்டா அவன் மாட்ட அவுத்துக்கிட்டு வந்தவன்? இது கள்ளிப்பட்டியா - களவாணிப்பட்டியா?" சரியான சாராயத் தொண்டை! அவன் கத்திய கத்தலில் விழித்துக் கொண்டது கள்ளிப்பட்டி.

சாக்கு, போர்வை, மேல்துண்டு, வேட்டி, முந்தானை, கிழிஞ்ச சேலை போன்ற வஸ்துகளுக்கு அடியில் கிடந்த ஜீவன்கள் பட ரென்று உதறி எழுந்து அவசர அவசரமாய் ஓடி வந்தன அம்பலக்கல் நாடகம் பார்க்க.

கோடாங்கிப்பட்டி, பாலாறுப்பட்டி ஆளுக குத்து வெட்டுக்கும் கொலைப் பழிக்கும் அஞ்சாதவர்கள் என்று பெயரெடுத்தவர்கள். வந்தவர்கள் பத்து பன்னிரண்டு பேர். மரத்துக்கு மீசை வைத்தமாதிரி உயரமாய் இரண்டு பேர். 'கட்டையும் குட்டை'யுமாய் இரண்டு மூன்று பேர். வேல் கம்பு மாதிரி ஒல்லியாய் ஒருவன்; தன் எடைக்கு எடை கையில் ஒரு 'டார்ச்லைட்' வேறு வைத்திருந்தான். பெல்ட்டுக்குள் செருகிவைத்த சூரிக்கத்தி லேசாய்ப் பார்வைக்குத் தெரிந்து பயம் காட்ட வேண்டும் என்பதற்காகவே ஒரு சல்லடைத் துணியில் சட்டை தைத்துப் போட்டிருந்தான் இன்னொரு கிடா மீசைக்காரன்.

"எவண்டா மாட்டை அவுத்துக்கிட்டு வந்தது?" - மீண்டும் கத்தினான் சூரிக்காரன்.

"யப்பா! 'அவுத்து'க்கிட்டு வந்த மாடா? 'அத்து'க்கிட்டு வந்த மாடான்னு நீயே பாத்துக்க" பேயத்தேவர் பதற்றமில்லாமல் பதில் சொன்னார்.

"அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. மாட்ட ஓட்டிவிடறியா? காசைக் குடுக்கறியா?" - ஒருவன் வாயிலிருந்து பல் துலக்காத பேச்சு நாறியது.

"நிறுத்துறா வெண்ணெ! மாட்ட அவுரு வீட்ல கட்டாம அம்பலக்கல்ல கட்டிருக்காரே! அதிலேயே தெரியல பேயத்தேவர் பெரிய மனுசன்னு...? நெல்லு சிந்தினா அள்ளலாம் - சொல்லு சிந்தினா அள்ள முடியாது! நிதானமாகப் பேசு" கள்ளிப்பட்டி இளரத்தம் ஒன்று துடித்தது.

"வாங்குன காசைக் குடுக்க வக்கில்ல. பேச்சு என்னடா பேச்சு?"

"ஏப்பா! சின்னுப்பய பண்ண தப்புக்குப் பேயத்தேவன் மாட்டப் புடிச்சா என்னப்பா நியாயம்?" உள்ளூர்ப் பெரிசு நியாயம் பேசியது.

"அருவாள எடுத்து ஒருவன் ஆள வெட்டிப்பிட்டான். அருவாமேல கேசா? ஆளுமேல கேசா? மகன் பட்ட கடன அப்பன்தான தீக்கணும்?" வந்தவன் வாதித்தான்.

எப்படித் தீர்ப்பார் பேயத்தேவர்? மகளுக்குச் சேர்த்து வைச்ச சாசு எழவுக்குச் செலவாச்சு. கருமாதிக்கு வந்த காசை கழுத்தில சங்கிலியாப் போட்டுட்டுப் போயிட்டா செல்லத்தாயி. மிளகாச் செடி ரெண்டு எடுப்பு நல்லா எடுத்துச்சு. அப்புறம் சீக்கடிச்சுச் செத்துப் போச்சு. சரளைக்காட்ல வெதைச்ச சோளம் வெளைய எப்படியும் இன்னும் எழுபது நாளாகும். அது கடனுக்கு வெளையுதோ இல்ல காக்காய்க்கு வெளையுதோ?

"அய்யா சண்ட சத்தம் வேணாம். மகன்பண்ண

# இதிகாசம்

தப்ப அப்பன் ஏத்துக்கறேன். இப்ப ஏங்கிட்ட ஒண்ணுமில்ல. நான் வெறும்பய. என்னச் சல்லிச்சல்லியா வெட்னாலும் சல்லிக்காசு தேறாது. ஒரு மூணு மாசம் பொறுங்க. தலைய அடமானம் வச்சாகிலும் ஒங்க காசைக் குடுத்திடறேன்" - பேயத்தேவர் சத்திய வார்த்தை பேசினார் பொறுமையாய்; பொறுப்பாய்.

"தரலேன்னா?" என்றான் வேல்கம்பு.

"வீட்டுக்கு வீடு வரிபோட்டுக் கள்ளிப்பட்டியே ஒங்க காசைக் கட்டும். போங்கப்பா" என்றார் ஊர்ப் பெரிசு.

கட்டும்... கட்டும்... கஞ்சி காச்சிக் குடிக்கச் சொன்னா கள்ளச்சாராயம் காச்சிக்குடிக்கிற ஊராச்சே!"

அனாவசியமாய் விழுந்த ஒரு வார்த்தை மண்ணெண்ணெயில் விழுந்த தீக்குச்சியாய்ப் பட்டென்று பற்றியது.

இந்தப் பக்கம் நாலு பேரு முறுக்கி நிற்க- அந்தப் பக்கம் நாலு பேரு வேட்டிய மடிக்க - வயசுப் பெண்கள் முதன்முதலாகக் கேட்கும்படியான பல கெட்டவார்த்தைகள் பறக்க - ஊரே ஒரு கலவரத்துக்குத் தயாராக - அம்பலக்கல்லிலிருந்து எகிறிக் குதித்த பேயத்தேவர் போர்த்திருந்த வேட்டியை எடுத்து உதறி இடுப்பில் கட்டிக்கொண்டு "நிறுத் துங்கப்பா! நிறுத்துங்கப்பா! எம் பய பண்ண தப்புக்கு ஆளாளுக்கு ஏம்பா அடிச்சுக்கிட்டுச் சாகறீங்க?" என்று குறுக்கே விழுந்து வெடச்சு நின்ற வெடலப் பயல்களை அமர்த்தினார்.

அப்போதுதான் முந்தானையில் எதையோ முடிந்துகொண்டு 'லொங்கு லொங்'கென்று ஓடிவந்தாள் முருகாயி.

"அய்யா ராசா அந்தச் சீலக்காரி நம்மள கைவிடல சாமி..." என்று முந்தானை திறந்தாள்.

அஞ்சும் - ரெண்டும் ஒண்ணும் - கால் ரூபாயும் அரை ரூபாயுமாய் முந்தானை முழுக்க பணமாய்த் தெரிந்தது.

"இது ஏது..." என்றார் பேயத்தேவர்.

கோழி முட்டையிடவும் அடைகாக்கவும் அடைக்கூடு செய்வதுண்டு கிராமத்தில். மண்பானை ஒன்றைச் சரிபாதி உடைத்து வாய்வளையம் கீழிருக்கக் கவிழ்த்து, அதை மணலால் நிரப்பி பெட்டைக் கோழிக்கொரு குடியிருப்புச் செய்து கொடுத்தால் அது அங்கேயே முட்டையிடும்; அடைகாக்கும்; குஞ்சு பொரிக்கும். அன்று அதிகாலை அடைக்கூடு சுத்தஞ்செய்ய விளக்குமாறேந்திப் போயிருக்கிறாள் முருகாயி. அடைக்கோழிக்குப் பின்னால் படுத்திருந்த பூனைக்குட்டியை அவள் கவனிக்கவில்லை. இவள் கூட்டுக்கருகே கோழி எச்சம் பெருக்க, விளக்குமாற்றின் கூரிய குச்சி ஒன்று பூனைக்குட்டியின் படாத இடத்தில் பட்டுவிட, அது மியாவ் என்று மீசை விடைத்துச் சீற, பயந்து போனவள் அவசரத்தில் அடைக்கூடு தட்டிவிட, அது சில்லு சில்லாய் உடைய, மணல் சிதற, மணலுக்குள் புதை யுண்டிருந்த காசுகள் ஒரேநேரத்தில் உயிர்த் தெழுந்தன. அந்தக் காசுகளைத்தான் மணலோடும் தவிட்டோடும் கோழியின் குறுஞ்சிறகுகளோடும் அள்ளி அடிமடியில் கட்டிக்கொண்டு ஓடிவந்திருக் கிறாள் முருகாயி.

"ஆத்தா அழகம்மா சேத்துவச்ச காசு போலிருக்கு. செத்துங்கொடுத்தாளே சீலக்காரி. ஆத்தா தெய்வம்யா தெய்வம்."

பிரமை பிடித்தவராய் நின்ற பேயத்தேவர் முந்தானையின் காசுகளைத் தொட்டுத் தொட்டுப் பார்த்தார் நடுங்கும் கரங்களால். அவருக்குப் பேச்சு வரவில்லை. பார்த்துக்கொண்டேயிருந்தார். சூரியனின் முதல் கிரணத்து முத்தத்தில் கண்சிமிட்டி மின்னியது கால் ரூபாய். "செத்துப்போன சிறுக்கி இந்த ரூபத்தில இருக்காளோ?"

"ஏலே! ஒரு நல்ல மனுசனைக் குடும்பம் கைவிடலாம். கும்பிடற சாமி கைவிடுமா? குடுக்கிற தெய்வம் கோழிக்கூட்டப் பிரிச்சுக் குடுத்திருக்கப்பா." - முத்தாலம்மன் கோயில் பூசாரி பரவசமானார்.

முந்தானை உதறி அம்பலக்கல்லில் மொத்தக் காசையும் கொட்டி, அஞ்செல்லாம் ஒண்ணு - ரெண்டெல்லாம் ஒண்ணு-ஒண்ணெல்லாம் ஒண்ணு-காலரையெல்லாம் ஒண்ணு என்று வகை பிரித்து ஒருத்தருக்கு ரெண்டு பேராய் மொத்தமாகவும் தனித்தனியாகவும் எண்ணிப்பார்க்கத் 'தொண்ணூத்தி ஏழே முக்கால்' இருந்தது. பெரிசுகளெல்லாம் கூடிப் பஞ்சாயத்தை இனி 'பைசல்' பண்ணி விடலாம் என்று தீர்மானித்தன.

"கேளுங்கப்பா! இந்தத் தொண்ணூத்தி ஏழே முக்கால வாங்கிக்கிட்டு மாட்ட விட்டுட்டுப் போயிட வேண்டியது. மிச்சக்காசைப் பேயத்தேவர் சொன்னபடி மூணு மாசம் கழிச்சு வந்து வாங்கிக்க வேண்டியது. சரி சொல்லுங்கப்பா. நாளைக்கி நமக்குள்ள தண்ணி கிண்ணி பொழங்கணும்... தாயாப் புள்ளையா இருக்கணுமா இல்லையா?".

கோடாங்கிப்பட்டியும் பாலாறுப்பட்டியும் குசுகுசுவென்று கூடிப்பேசின.எவன் முகத்திலும் ஈவிரக்கமில்லை. அதில் ஒரு ஊசிமூக்கன் மட்டும் பேசினான்.

(வளரும்)



## முன்னாள் சுற்றுலாத்துறை அமைச்சரின் மனைவி ஐ.தே.க.வில் இணைவு

(கொழும்பு)

முன்னாள் சுற்றுலாத்துறை அமைச்சர் நந்தன குணதிலக்கவின் மனைவி பிரியாணி குணதிலக்க ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துகொண்டுள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பாணந்துறை மாநகரசபைக்காக போட்டியிடத் தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாணந்துறை மாநகரச்பையின் மேஜர் பதவிக்காக நந்தன குணதிலக்க போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. எதிர்க் கட்சித் தலைவரின் இல்லத்தில் வைத்து பிரியாணி குணதிலக்க கட்சி உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கட்சியின்பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

(ஸ்ரீ-2)

## தம்புள்ள நகரசபைத் தேர்தலில் பௌத்த பிக்குகள் சுயாதீனமாக போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தம்புள்ள நகரசபைக்காக பௌத்த பிக்குகள் சுயாதீனமாக போட்டியிட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பௌத்த பிக்குகளைக் கொண்டமைந்த சுயாதீனக் குழுவொன்று நேற்று முன்தினம் வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளன.

ரன்கிறி தம்புளு மஹா சங்க சபை என்ற பெயரிலான பௌத்த பிக்குகள் குழாமே இவ்வாறு தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளன.

(ஸ்ரீ-2)

## வெங்காயம் விலை வீழ்ச்சி

(கொழும்பு)

பாகிஸ்தானிலிருந்து அரசாங்கம் வெங்காய இறக்குமதியை மேற்கொண்டதையடுத்து சந்தையில் பெரிய வெங்காயத்தின் விலை 200 ரூபாவிலிருந்து 85 ரூபா முதல் 95 ரூபாவரை குறைவடைந்துள்ளது.

புறக்கோட்டை சந்தை வட்டாரங்களில் வெங்காயம் கிலோ ஒன்றுக்கு நூறு ரூபாவால் குறைவடைந்துள்ளது.

நாடளாவிய ரீதியில் சுமார் 250 கூட்டுறவு மொத்த விற்பனை நிலையக் கிளைகளில் வெங்காயம் கிலோ 95 ரூபா வீதம் விற்பனை செய்யப்படுவதாக கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத் தலைவர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

வெங்காயத்தின் விலை மேலும் வீழ்ச்சியடையும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

## பால்மா இறக்குமதி தீர்வை 22ரூபாவினால் குறைப்பு

(கொழும்பு)

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால்மா மீது விதிக்கப்பட்டிருந்த 50 ரூபா இறக்குமதித் தீர்வையானது, ஒரு கிலோவுக்கு 28 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

பால்மா வகைகளின் சில்லறை விலைகளை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்குமாறு பால்மா சந்தைப்படுத்தும் நிறுவனங்கள், நுகர்வோர் விவகார அதிகார சபையைக் கோரியிருந்தன.


இந்நிலையில், விலை அதிகரிப்பை தவிர்ப்பதற்காகவே பால்மா மீதான இறக்குமதித் தீர்வை 22 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தற்போதுள்ள பால்மா விலைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஸ்ரீ-2)

## திட்டமிட்ட பொருளாதார கொள்கை அவசியம்

### அநுரகுமார திசாநாயக்க எம்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய இலங்கையை உருவாக்குவதே தமது கட்சியின் முதலாவது கொள்கையென்றும் தற்போது நாட்டுக்கு திட்டமிட்ட பொருளாதாரக் கொள்கையே அவசியமென்றும் அதற்காக நாம் தயாராக வேண்டுமென்றும் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன ரீதியிலான அநீதிகள் ஒழிக்கப்பட வேண்டும், ஊழல் மோசடியற்ற ஆட்சி உறுதி செய்யப்படுதல் அவசியமாகும் என அவர் தெரிவித்தார்.

(ஸ்ரீ)

## மொஸ்கோ விமான நிலைய குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு ஜனாதிபதி மஹிந்த அனுதாபம்

ரஷ்யத் தலைநகரான மொஸ்கோவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட, காயமடைந்த பொது மக்களின் குடும்பத்தினருக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமெரிக்காவில் இருந்து தனது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார்.

மொஸ்கோவின் டொமேடொடோவோ விமான நிலையத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு அனுதாபம் தெரிவித்து ரஷ்ய ஜனாதிபதி திமித்ரீ மெத்வடேவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில்,

குறித்த குண்டுத்தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு எனது அனுதாபங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். அத்துடன் காயமடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருபவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

## பகிடிவதையில் ஈடுபட்ட சப்ரகமுவ பல்கலை மாணவர்கள் 58 பேர் இடைநிறுத்தம்

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் பகிடிவதையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சிரேஷ்ட மாணவர்கள் 58 பேரை பல்கலைக்கழக நிர்வாகத்தினர் இடைநிறுத்தியுள்ளனர்.

இவ் இடைநிறுத்தத்தை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் சமூகவியல் மற்றும் மொழிக்கற்கை நெறிகளுக்கான பேராசிரியர் எச்.எம்.எஸ். பிரியநாத் உறுதிப்படுத்தியுள்ளார்.

இடைநிறுத்தப்பட்ட மாணவர்கள் உபவேந்தரின் அனுமதியின்றி பல்கலைக்கழகத்தினுள் நுழைய முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெறும் பெண்களின் வயதெல்லை 21ஆக உயர்வு

(கொழும்பு)

வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக விண்ணப்பிக்கும் பெண்களின் குறைந்தபட்ச வயதெல்லை 21 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதென அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதற்கமைய வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்லும் பெண்களின் வயதெல்லை 18 இலிருந்து 21ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இது குறித்து வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேராவினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதேவேளை வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களின் மூலம் அதிகளவு அந்நிய செலாவணி ஈட்டப்பட்டு வருவதுடன் ஒரு மில்லியனுக்கும் அதிகமான இலங்கையர்கள் வெளிநாடுகளில் கடமையாற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஸ்ரீ-2)

## நீண்டகாலமாக புனரமைக்கப்படாதுள்ள வீதியால் போக்குவரத்துக்கு பெரும் சிரமம்

(பருத்தித்துறை)

அச்சுவேலி வல்லை வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கின்றது.

அண்மைக்காலமாக பெய்த மழையையடுத்து மேற்படி வீதி முற்றாக சேதமடைந்து காணப்படுகிறது.


வாகன ஓட்டிகள், பாதசாரிகள் இவ் வீதியால் செல்லமுடியாமல் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே உடனடித் திருத்தமாக தார் கடவைகளைப் போட்டு வீதியை செப்பனிட வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனைச் செய்ய தாமதிப்பதால் வாகனங்கள் விபத்துக்குள்ளாகி வருவதோடு வீதியில் வாகனங்கள் பழுதடைந்து நிற்பதாகவும் அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ் வீதியை உடனடியாக திருத்தம் செய்து தருமாறு அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(ஸ்ரீ-3-10)



கரவெட்டி கோவிற்சந்தை கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தின் தையற்பயிற்சி கண்காட்சி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வணபிதா கிறிஸ்ரிக்குமார் நாடாவெட்டி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட துன்னாலை மத்தி கிராமசேவையாளர் கணேசராசா ரதீசன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- கரவெட்டி செய்தியாளர்)




கிளி/ முருகானந்த ஆரம்பப்பாடசாலையின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தரம் 1 மாணவர்கள் அழைத்து வரப்படுவதையும் மேடையில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் த.தே.கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மாணவர்களுக்கு பரிசில்வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# ஜே.வி.பியில் இருந்த ஒரே உளவாளி அமைச்சர் விமல் வீரவன்சவே

## சுனில் ஹந்துன்நெத்தி எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பியில் இருந்த ஒரே உளவாளி அமைச்சர் விமல் வீரவன்ச என நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பிக்கும் வெளிநாட்டு உளவாளிகள் இருப்பதாக அமைச்சர் விமல் வீரவன்ச நேற்று முன்தினம் தெரிவித்திருந்தமை குறித்து பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வீரவன்ச வெளிநாட்டு உளவுப் பிரிவுகளுக்கு உளவுத்தகவல்களை வழங்குகிறாரா என்பது எமக்குத் தெரியாது. அவர் ஜே.வி.பியில் இருந்த போது கட்சியில் எடுக்கப் படும் முக்கியமான தீர்மானங்களை ராஜபக்ஷவினருக்கு வழங்கி வந்தார்.

பின்னர் கட்சியில் அது குறித்து விசாரணைகளை நடத்தப்பட்ட போது கட்சியின் தகவல்களை வழங்குவது வீரவன்ச என தெரிய வந்தது. அதன் பின்னர் அவருக்கு எதிராக ஒழுக்காற்றுவிசாரணை நடத்த முற்பட்டபோது அதனை எதிர்கொள்ளாது கட்சியில் இருந்து தப்பி ஓடினார். வீரவன்ச அன்று கட்சிக்கு இருந்து செய்ததைஇன்றுவெளியில்இருந்துகொண்டு செய்துவருகிறார் எனவும் ஹந்துன்நெத்தி குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டக்கச்சி மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப.3 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் வித்தியாலயத்தின் எதிர்கால விருத்தித்திட்டங்கள்,புதிய நிர்வாகத் தெரிவு என்பன இடம்பெறவுள்ளதால் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# பிரதமரின் பாதுகாப்பு வாகனம் விபத்துக்குள்ளானதில் ஐவர் காயம்

(கொழும்பு)

பிரதமர் தி.மு.ஜயரட்னவின் பாதுகாப்பு வாகனம் கம்பளையில் விபத்துக்குள்ளானதில் ஐந்து பாதுகாப்பு அதிகாரிகள் காயமடைந்து கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை கம்பளை நாரன்விட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கம்பளையிலிருந்து தொலுவையிலுள்ள பிரதமரின் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த வேளையிலேயே இந்த வாகனம் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் காயமடைந்த ஐந்து பாதுகாப்பு அதிகாரிகளும் கம்பளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார். (ஸ்ரீ-2)

# ஆபாச வீடியோ படங்களை விற்றவர் பொலிஸாரினால் கைது

(கொழும்பு)

கண்டி தெல்தெனியா நகரில் ஆபாச வீடியோ படங்களையும் புகைப் படங்களையும் இரகசியமான முறையில் விற்பனை செய்து வந்ததாக கூறப்படும் 24 வயதுடைய இளைஞர் ஒருவரை தெல்தெனியா பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இவர் தமது கணனியில் இணையத்தளங்கள் மூலம் ஆபாச காட்சிகளுடைய வீடியோப் படங்களையும் புகைப்படங்களையும் தரவிறக்கம் செய்து வைத்து வாடிக்கையாளர்களுக்கு விற்பைன செய்து வந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை தெல்தெனியா நீதிமன்றத்தில முன் ஆஜர் செய்ய பொலிஸார் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# இராணுவத் தலைமையகத்தை இடமாற்றுவதற்கு புதிய காணி பெற்றுக்கொள்ள அனுமதி

(கொழும்பு)

கொழும்பிலுள்ள இராணுவத் தலைமையகத்தை வேறிடத்துக்கு மாற்றுவதற்காக பொருத்தமான காணியை பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை நேற்றுமுன்தினம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்காகப் பொருத்தமான காணியை கண்டறியும் பொறுப்பு நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் புதியதொரு கட்டடம் அமைக்கும் தேவையை மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் பொறியியல் ஆலோசகர்கள் நிராகரித்துள்ளதாக பிரதமர் டி.எம்.ஜயரட்ன அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் மற்றொரு கட்டடம் அமைப்பதற்கான யோசனைக்கு அங்கீகாரம் கோரி அமைச்சரவைப் பத்திரமொன்றை பிரதமர் முன்னர் அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார் . எனினும் நாடாளுமன்ற அலுவல்களை மேற்கொள்வதற்கு தற்போதைய கட்டடத் தொகுதி போதுமானது என பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# 2011.01 26 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1695 - ஒட்டோமான் பேரரசின் மன்னன் இரண்டாம் அஹமது இறந்ததை அடுத்து இரண்டாம் முஸ்தபா மன்னனானான்.

★ 1880 - தோமஸ் எடிசன் வெள்ளொளிர்வு விளக்குக்கான காப்புரிமம் பெற்றார்.

★ 1888 - தேசிய புவியியற் கழகம் (National Geographic Society) வோஷிங்டன் டிசியில் அமைக்கப் பட்டது.

★ 1915 - ஐக்கிய அமெரிக்க கடற்படையினர் ஹெயிட்டியை ஆக்கிரமித்தனர்.

★ 1918 - பின்லாந்தில் உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.

★ 1924 - விளாடிமிர் லெனினின் உடல் மொஸ்கோவின் செஞ்சதுக்கத்தில் மாலை 4.00 மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது.

★ 1926 - ஜோன் லோகி பயார்ட் முதல் தொலைக்காட்சி ஒளிபரப்பை நடத்திக் காட்டினார்.

★ 1938 - நியூயோர்க்கில் நயாகரா நீர்வீழ்ச்சியில் நயாகரா பாலம் உடைந்து வீழ்ந்தது.

★ 1944 - இரண்டாம் உலகப் போர்: அச்சு நாடுகளின் இரண்டாண்டு லெனின்கிராட் ஆக்கிரமிப்பு முடிவுக்கு வந்தது.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: இலட்சக் கணக்கான யூதர்கள் குரூரமாகக் கொல்லப்பட்ட போலந்தின் அவுஷ்விடஸ் சித்திரவதை முகாமில் எஞ்சியிருந்த கைதிகள் 7ஆயிரத்து 600 பேர் சோவியத் செம்படையினரால் விடுவிக்கப்பட்டனர்.

★ 1967 - அப்பலோ 1 விண்வெளி வீரர்கள் மூவர் கென்னடி விண்வெளி மையத்தில் தமது விண்கலத்தைப் பரிசோதிக்கும் போது இடம்பெற்ற தீ விபத்தில் கொல்லப்பட்டனர்.

★ 1973 - வியட்நாம் போரை முடிவுக்குக் கொண்டு வந்த உடன்பாடு பாரிசில் எட்டப்பட்டது.

★ 1996 - நைஜரில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து அந்நாட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஜனாதிபதி மஹமான் ஊஸ்மன் பதவியிலிருந்து அகற்றப்பட்டு இராணுவத் தளபதி இப்ராகிம் மயினாசரா ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.

### பிறப்புகள்

★ 1756 - வொல்ஃப்கேங்க் அமதியுஸ் மொட்ஸார்ட், ஐரோப்பிய செவ்வியல் இசையமைப்பாளர் (இ.1791)

★ 1775 - பிரீடரிக் ஷெல்லிங், ஜேர்மனிய மெய்யியல் அறிஞர் (இ.1854)

★ 1832 - லூயிஸ் கரோல், ஆங்கில எழுத்தாளர், கணிதவியலாளர், கிறிஸ்தவப் பாதிரியார் (இ.1898)

★ 1903 - ஜோன் எக்கில்ஸ், நோபல் பரிசு பெற்ற அவுஸ்திரேலியர் (இ.1997)

★ 1936 - சாமுவேல் டிங், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

★ 1944 - மைரேயட் கொரிகன், நோபல் பரிசு பெற்றவர்

★ 1974 - சமிந்த வாஸ், இலங்கைத் துடுப்பாட்ட வீரர்.

### இறப்புகள்

★ 1814 - ஜொகான் ஃபிக்டே, ஜேர்மனிய மெய்யியல் அறிஞர் (பி.1762)


★ 1893 - மகா வைத்தியநாத ஐயர், கர் நாடக இசைப் பாடகர் (பி.1844)

★ 1967 - அப்பலோ 1 விண்வெளி வீரர்கள்.
எட்வர்ட் வைட் (பி.1930)
வேர்ஜில் கிறீசம் (பி.1926)
றோஜர் காபி, (பி.1935)

**2002 - நைஜீரியாவின் லாகோஸ் நகரில் இராணுவக் களஞ்சியமொன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்புகளில் ஆயிரம் பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.**

# "ஸ்பெஷல்" நாடகம்; சில சிந்தனைகள்

4



இசைநாடகத் துறையில் சிறப்புப்பெற்று விளங்கிய கலைஞர்களைக் கொண்டு ஸ்பெஷல் நாடக அரங்கு உருவாக்கம் பெற்ற போது, அந்த மாற்றம் இசைநாடகக் கலைஞர்களைப் பொறுத்தவரை அவர்களின் திறமைக்கான சவாலாகவும் அமைந்தது. இதனால் இசை நாடகங்களின் கருப்பொருளாக அமைந்த புராண, இதிகாசக் கதைகளைச் சந்தேகமறத் தெரிந்து கொள்ள வேண்டிய தேவையும் இவர்களுக்கு ஏற்பட்டது. குறித்த புராண, இதிகாச நாடகக் கதைகளோடு இணைந்த கிளைக்கதைகளையும் இவர்கள் அறிந்திருக்க வேண்டியவராயினர். ஸ்பெஷல் நாடக மேடைகளில் இடம்பெற்ற சம்வாதங்களின் போது இக்கிளைக் கதைகளிலிருந்து உதாரணங்களை எடுத்துக்கூறித் தமது பக்கத்து நியாயத்தை நிலைநிறுத்த வேண்டிய அவசியம் உணரப்பட்ட நிலையில், ஸ்பெஷல் நாடக அரங்குக் கலைஞர்கள் தம்மை வளப்படுத்திக் கொள்ளத் தொடங்கினர். முதுமொழிகளுக்கும்கூடப் புதிய விளக்கங்களையும் வியாக்கியானங்களையும் கொடுக்க வேண்டிய கட்டாயத்தை இக்கலைஞர்கள் உணர்ந்தனர்.

ஸ்பெஷல் நாடக அரங்கில் உரைநடையில் இடம்பெற்ற இச்சம்வாதம், தென்னிந்திய மரபில் ஆரோக்கியமற்ற சூழ்நிலையை உருவாக்கியது. ரசிகர்களிடம் கைதட்டலைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டு, தமிழக ஸ்பெஷல் நடிகர்கள் தர்க்கத்தின்போது ஒரு நடிகர் மற்றைய நடிகரின் சாதியை இழிவாக உரைத்து நடிகர்களின் சொந்த வாழ்வு விவகாரங்களையும் மேடைக்கு இழுக்கும் நிலைக்குத் தள்ளப்படலாயினர். ஆனால் ஈழத்து ஸ்பெஷல் நாடக மரபில், மேடையில் நிகழ்ந்த

**கொழும்பில் நடைபெற்ற சர்வதேச எழுத்தாளர் மாநாட்டில் வாசிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை**

இத்தர்க்கம் நாடகக் கதைப் பண்பைச் சிதைக்காத வகையில் இடம்பெற்றதாகக் கலைஞர் எஸ்.தம்பிஜயா குறிப்பிடுகின்றார்.

தென்னக ஸ்பெஷல் நாடக மரபில் பிரதம பாத்திரங்களை ஏற்ற ஸ்பெஷல் நடிகர்கள் சிறுபாத்திரங்களை ஏற்ற பேசத் தெரியாத அப்பாவி நடிகர்களைத் தாறுமாறாகக் கேள்விகள் கேட்டுத் திக்குமுக்காட வைத்து அவையோரின் கைதட்டல்களைப் பெற்றனர் என அவ்வை தி.க.சண்முகம் குறிப்பிடுவது ஈழத்து ஸ்பெஷல் நாடக அரங்குகளிலும் நிகழ்ந்தது. ஆனால் சிறுபாத்திரங்களிலும் குணச்சித்திரப் பாத்திரங்களிலும் தோன்றிப் பெரும் ஸ்பெஷல் நடிகர்களிடம் அகப்பட்டுக்கொண்டு நின்றவர்களைக் கைதூக்கிவிடும் முயற்சிகளும் ஈழத்து ஸ்பெஷல் நாடக மரபின் சிறப்பார்ந்த அம்சமாக இடம்பெற்றன.

**இந்த ஆய்வின் கண்டறிதல்கள்**

இதுவரை தெரிவிக்கப்பட்ட கருத்துக்களிலிருந்து இந்த ஆய்வின் மூலமான கண்டறிதல்களைப் பட்டியலிடலாம்.

- 'இசைநாடகம்' என்பதனைக் கொட்டகைக் கூத்து, ஸீன் கூத்து, டிறாமாக் கூத்து என ஈழத்தவர்கள் அழைத்தபோதும் அவை சங்கரதாஸ் சுவாமிகள் பாணியிலான இசைநாடகங்களையே சுட்டுகின்றன.
- பார்ஸி மரபு தமிழகத்தில் அறிமுகமாகும் முன்பு, ஈழத்திலும் தென்னகத்திலும் மேடையேறிய புதிய நாடக வகை, விலாசங்கள் ஆகும்.
- ஈழத்திற்கு வருகை தந்த தென்னகக் குழுக்கள் ஆரம்ப காலங்களில் மேடையேற்றிய நாடகங்கள் விலாசங்களாகும். அதன் பின்பு வந்த குழுக்கள் பார்ஸி மரபு வழியிலமைந்த விலாசங்களையே மேடையேற்றின.
- 1919ஆம் ஆண்டுக்கும் 1939ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்திலேயே சங்கரதாஸ் சுவாமி பாணியிலான இசை நாடகங்களைத் தென்னகக் குழுக்கள் ஈழத்தில் மேடையேற்றின.
- தனிக்குழுக்களாக அன்றி வெவ்வேறு குழுவைச் சேர்ந்த சிறப்பான கலைஞர்களை ஒன்றுசேர்த்து மேடையேற்றிய நாடகங்களே ஸ்பெஷல் நாடகங்கள் ஆகும்.
- தென்னகத்தில் சங்கரதாஸ் சுவாமி பாணியிலான இசைநாடகம் சீர்குலைந்து போனமைக்கு ஸ்பெஷல் நாடகங்களே காரணமாகும்.
- தென்னகத்தோடு ஒப்பிடும்போது ஈழத்தில் 'ஸ்பெஷல் நாடகம்' ஆரோக்கியமான செல்நெறியைக் கொண்டிருந்தது.

**நிறைவுரை**

நாடகம் என்பது ஓர் ஒழுக்கம் என்ற வகையில், கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தி, 'நாடகபாடம்' என்ற ஒரு வரையறையை ஏற்படுத்தி இசைநாடக மரபுக்கு வளம் சேர்த்த நாடகங்கள் 'சங்கரதாஸ் சுவாமி பாணி' இசைநாடகங்களே. 'ஸ்பெஷல்' நடிகர்களைக் கொண்டு, இடைக் காலத்தில் இசை நாடகங்களானவை 'ஸ்பெஷல் நாடகங்கள்' என்ற பெயரில் மேடையேற்றப்பட்டிருப்பினும், இசைநாடகத்தை 'ஸ்பெஷல் நாடகம்' என அழைத்தல் பொருந்தாது. ஸ்பெஷல் நடிகர்களைக் கொண்டு நாடகம் மேடையேற்றப்படினும் நாடகத்தின் கட்டுக்கோப்புக்கு முறையான பயிற்சியும் ஒழுங்கும் அவசியம். (முற்றும்)

**கலாநிதி த.கலாமணி**
யாழ்.பல்கலைக்கழகம்

# ஆசையைத் துறப்பது முட்டாள்தனம்!

இமயமலையின் அடிவாரம்.நீண்ட பயணத்திற்குப்பின் பஸ்ஸிலிருந்து அந்த இளைஞன் இறங்கினான். அவனுடைய இரண்டு துணி மூட்டைகளைச் சுமந்து கொண்டு மலையேற, காத்திருந்த கழுதைகளில் ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டான்.

'எங்கே போகவேண்டும் சாஹேப்?'- கழுதையை வழிநடத்துபவன் கேட்டான். 'ஏதாவது ஒரு நல்ல சாமியார் ஆசிரமத்துக்குப்போ.' 'எத்தனை நாட்கள் தங்கப்போகிறீர்கள்.' 'நாட்களா? இனி என் வாழ்க்கையே இங்கேதான். என் மனைவி, குழந் தைகள், அம்மா, அப்பா, பிஸினஸ் எல்லாவற்றை யும் உதறிவிட்டு வந்துவிட்டேன். இதோ என் கழுத்தில் இருக்கிறதே தங்கச் சங்கிலி... இதைக் கூட உனக்குக் கொடுத்துவிடப்



போகிறேன்.' கழுதைக்காரன் வியந்துநின்றான். 'இந்தச் சின்ன வயதில் உங்களுக்கு எப்படி இதெல்லாம் சாத்தியமாயிற்று?'

இளைஞனின் முகத்தில் பெருமிதம் வழிந்தது. 'எங்கள் ஊருக்கு வந்திருந்த குரு ஒருவர் சொன்னது என்னை ஆழமாகத் தொட்டுவிட்டது. ஆசைகள்தான் துன்பத்திற்கெல்லாம் காரணமாம் அதுதான் எல்லா ஆசைகளையும் உதறி விட்டு வந்துவிட்டேன்.'

'எல்லாவற்றையும் உதறிவிட்டு இந்த மூட்டைகளில் என்ன கொண்டுவந்து இருக்கிறீர்கள், சாஹேப்?' 'இங்கே குளிர் அதிகம் என்று சொன்னார்கள். அவசரத்திற்குப் பக்கத்தில்கடைகளும்கிடையாதாமே. அதனால், இந்த மூட்டைகளில் எனக்குவேண்டிய கம்பளிகளை எடுத்துவந் திருக்கிறேன்.'

கம்பளியைக்கூட உதற முடியாமல் வாழ்க்கையையே உதறியதாகச் சொல்லும் அந்த இளைஞனைப்போல ஆசையைத் துறந்ததாகப் பலர் சொல்லிக்கொண்டு அலைகிறார்கள்.

ஆசையில்லாமல் இந்தப் பிரபஞ்சம் இல்லை. ஆசை இல்லாமல் இந்த உடல் இருக்காது... உயிர் இருக்காது. ஆசைப்படக் கூடாது என்று இந்தப் பிரபஞ்சம் ஒருநாளும் உங்களுக்குச் சொல்லித்தரவில்லை. ஆசையைத்துறந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்பதைப்போன்ற முட்டாள்தனமான தத்துவம் எதுவும் இல்லை.

ஆசையைத் துறக்க தீர்மானித்துவிட்டேன் என்று உங்கள் மனம் போலித்தனமாக துறவு பேசும். மனம் தந்திரசாலி எதையோ சொல்லி உங்களை நம்பவைத்து ஏமாற்றும். அந்த சூட்சுமம் அதற்குத் தெரியும். ஆனால் உடம்பு? காற்றுப் புகமுடியாதபடி உங்கள் வாயையும் மூக்கையும் இறுகப்பொத்திக் கொண்டு வேடிக்கை பாருங்கள்.

ஒரு நிமிடம் இரண்டு நிமிடம் வேண்டுமானால் உடம்பு பொறுத்துக்கொள்ளும். அப்புறம், உயிர் வாழ வேண்டும். என்று உங்கள் உடம்புக்குள் பீறிட்டு எழும் ஆசை உங்கள் கையை பிடுங்கிப்போடும். விட்டுப் போனதற்கும் சேர்த்து அள்ளி அள்ளி ஆக்ஸிஜனைக் குடிக்கும். ஆசையில்லைஎன்று உங்கள் மனம் சொன்ன தத்துவங்கள் எல்லாம் உடம்பிடம் எடுபடாது. ஏனென்றால் அதற்குப் பொய்சொல்லி ஏமாற்றத்தெரியாது.

உடம்பு என்று மொத்தமாகக் கூடச் சொல்லவேண்டாம். அதில் இருக்கும் ஒவ்வொரு செல்லும் ஆசையில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. விருந்தாளியாக உள்ளே ஒரு நோய்க்கிருமி நுளைந்து பார்க்கட்டுமே... உடனே ஒவ்வொரு செல்லும் ஆயுதத்தை தூக்கிக்கொண்டு கடுமையான போருக்குக் கிழம்பிவிடும். எதற்காக?

பிரபஞ்சம் அதற்கு வாழும் ஆசையைக் கொடுத் திருக்கிறது. இன்னும் அழகாகப் பார்த்தால், ஆசை களைத் துறக்கவேண்டும் என்று விரும்பினால் அடிப்படையில் அந்த விருப்பமும்ஓர்ஆசைதானே? உங்கள் ஊருக்கு ஒரு சாமியார் வந்திருப்பார்.

'நீ பணத்தின்மீது ஆசைவைத்தாய் அதுதான் உன் துன்பத்திற்கு எல்லாம் காரணம் கடவுளின் மீது ஆசை வை' என்பார். உங்களிடம் பத்துக் கோடி ரூபாய் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். கடவுளை நம்பி உங்கள் பணத்தை எல்லாம் தேசத்தில் இருக்கும் ஏழைகளுக்கு பிரித்துக் கொடுத்து விட்டால், உடனே நிம்மதி வந்துவிடுமா?

நாளையிலிருந்து இந்தத் தேசத்தில் உங்களையும் சேர்த்து ஏழைகளின் எண்ணிக்கையில் ஒன்றுகூடிப்போகும். அவ்வளவுதான்.

பணம் கையில் இருந்தால் என்ன வெல்லாம் செய்யமுடியும் என்பதாவது உங்களுக்குத் தெரியும். கடவுளால் என்ன செய்ய முடியும்,என்ன செய்ய முடியாது என்று உங்களுக்கு எந்த அனுபவமும் கிடையாது. இன்பத்திற்கு ஆசைப்படாதே, சொர்க்கத்துக்கு ஆசைப்படு. அதிகாரத்துக்கு ஆசைப்படாதே. அமைதிக்கு ஆசைப்படு என்று வேறொரு அறிவுரையும் அடிக்கடி கிடைக்கும்.

சங்கரன் பிள்ளைக்கு ஒருமுறை மோசமான முதுகுவலி வந்தது. டாக்டர் எக்ஸ்ரேயை வெளிச்சத்தில் பார்த்தார். இந்த எக்ஸ்ரேயைப் பார்த்தீர்களா? உங்கள் முதுகுத்தண்டு தீவிரமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆபரேஷன் தான் செய்ய வேண்டும்.

எவ்வளவு செலவாகும், டாக்டர்? 'என் ஃபீஸ் இருபத்தைந்தாயிரம் ரூபாய். ஆஸ்பத்திரியில் ஆறு வாரம் தங்கி ஓய்வு எடுக்க வேண்டியிருக்கும்' சங்கரன்பிள்ளை திகைத்தார். அவ்வளவு பணத்துக்கு எங்கே போவது?

"இதோ வந்துவிடுகிறேன் டாக்டர்" என்று எக்ஸ்ரேயை வாங்கியவர், நேராக எக்ஸ்ரே எடுத்தவரிடம் விரைந்தார். "டாக்டருக்கு இருபத்தைந்து ரூபாய் கொடுத்து ஒரு மணி நேரத்தில் சிகிச்சை முடிகிற மாதிரி இந்த எக்ஸ்ரேயை திருத்தித்தர முடியுமா... ப்ளீஸ்?" என்று கேட்டார்.

அப்படி எக்ஸ்ரேயைத் திருத்தித்தரும் சாமி யார்கள்தான் ஆசைகளை ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு மாற்றிக்கொள்ளச் சொல்பவர்கள்.

இன்னொரு சாமியார் வருவார்... சரி, சரி ஆசையை மொத்தமாக விட்டொழிக்க வேண்டாம் கொஞ்சமே கொஞ்சம்... இதோ இத்தினியூண்டு வைத்துக்கொள், பறவாயில்லை. என்று அனுமதி தருவார்.

விரும்பினால் எனக்கு இன்னும் கிடைக்கும். ஆனால் எனக்கு இதுபோதும் என்று ஒரு வைராக் கியத்துடன் ஆசையைக் குறைத்துக் கொண்டீர்களேயானால் அதை ரசிக்கலாம். அது உங்களுக்கு நிறைவைத்தரும்... சந்தோசத்தைத்தரும்.



## ஆன்மீகம் 01

ஆனால் 'எனக்கெங்கே அதெல்லாம் கிடைக்கப்போகிறது? இதுவேபோதும்' என்று தத்துவம் பேசி, உங்கள் ஆசைகளின் சிறகுகளைக் கத்திரித்தீர்களேயானால் அது கோழைத்தனம்.


பக்கத்துவீட்டுக்காரன் படு பேராசைக்காரன். ஆனால் அவனுக்கு எல்லாம் கிடைக்கிறது. நான் ஆசைப்பட்டதே இத்துனூண்டு. அதுகூட எனக்குக் கிடைக்க மாட்டேன் என்கிறதே? என்று துயரம்தான் மேலும் அதகமாகிப்போகும் அதனால் தான் சொல்கிறேன், ஆசைப்படுங்கள் மிகப்பெரிதாக ஆசைப்படுங்கள். அந்த தைரியம் கூட இல்லாமல் அற்பமாக ஆசையை சுருக்கிக்கொண்டீர்களேயானால், வாழ்க்கையில் வேறு எதைப் பெரிதாக நீங்கள் சாதித்துவிடப் போகிறீர்கள்?


உங்களின் வாழ்க்கையின் தரத்தையே நிர்ணயம் செய்யப்போகும் ஆசைகளைப் பற்றி இன்னும் ஆழமாகத் தெரிந்து கொள்வோமா...? (வளரும்)


**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# இவ்வாண்டுக்கான பத்மவிருதுகள் பெறுவோர் விபரம் அறிவிப்பு

## பின்னணிப் பாடகர் எஸ்.பி.க்கு பத்மபூஷண் விருது


எஸ்.பி.பாலசுப்பிரமணியம்


அவ்வை நடராஜன்


ஜெயராம்


சஷிகபூர்


உஷாஉதுப்


கஜோல்


தபு


வகிதாரஹ்மான்

சினிமா பின்னணிப் பாடகர் எஸ்.பி. பால சுப்பிரமணியத்துக்கு பத்மபூஷண் விருதும் தமிழ் அறிஞர் அவ்வை நடராஜனுக்கு பத்மஸ்ரீ விருதும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியக் குடியரசு தின விழாவையொட்டி ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு துறைகளில் சிறந்த சேவையாற்றியவர்களுக்கு பத்ம விருதுகளை மத்திய அரசு அறிவித்து வருகிறது.

அதன்படி இந்த ஆண்டுக்கான பத்ம விருதுகள் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டன.

தமிழ்நாட்டை சேர்ந்த 22 பேர் இந்த விருதுக்காக தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளனர். பிரபல பின்னணி பாடகர் எஸ்.பி.பால சுப்பிரமணியம் இந்த ஆண்டு பத்ம பூஷண் விருது பெறுகிறார். பின்னணி பாடகர், இசை அமைப்பாளர், நடிகர் ஆகிய துறைகளில் அவர் சிறப்பாகப் பணியாற்றியதற்காக இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் அறிஞரும் தஞ்சை தமிழ்ப் பல் கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான அவ்வை நடராஜனுக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இலக்கியம் மற்றும் கல்விக்கு சிறந்த சேவை செய்ததற்காக அவர் இந்த விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மேலும் தமிழ் நாட்டைச் சேர்ந்த சி.வி. சந்திரசேகர் (பரத நாட்டியம்), டாக்டர் சூரிய நாராயணன் ராமச்சந்திரன் (அறிவியல் மற்றும் பொறியியல் துறை) ஆகியோருக்கும் பத்ம பூஷண் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வை நடராஜன் தவிர தமிழ் நாட்டை சேர்ந்த நடிகர் ஜெயராம் (சினிமா), எம்.கே. சரோஜா (பரதநாட்டியம்), எஸ்.ஆர்.ஜான கிராமன் (கர்நாடக இசைப்பாடகர்), கோவை நாராயணராவ் ராகவேந்திரன் (அறிவியல் மற்றும் பொறியியல்), மெக்கா ரபீக் அகமது மற்றும் கைலாசம் ராகவேந்திரராவ் (வர்த்தகம் மற்றும் தொழில்), டாக்டர்கள் சிவபாதம் விட்டல், மாதனூர் அகமது அலி (மருத்துவம்) ஆகியோருக்கு பத்மஸ்ரீ விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பழம்பெரும் தமிழ் மற்றும் தெலுங்கு நடிகர் ஏ.நாகேஷ்வரராவ் (சினிமா), திட்டக் குழு துணைத்தலைவர் மாண்டெக்சிங் அலுவாலியா, முன்னாள் தூதர் பிரஜேஷ் மிஸ்ரா, முன்னாள் கவர்னர் ஏ.ஆர்.கித்வாய், 13ஆவது நிதிக்குழு தலைவர் விஜய் கேல்கர், முன்னாள் அட்டர்னி ஜெனரல் பராசரன் (பொதுத்துறை), விப்ரோ கம்யூட்டர் நிறுவன தலைவர் அசீம் பிரேம்ஜி (வர்த்தகம் மற்றும் தொழில்) உட்பட 13 பேர் பத்மவிபூஷண் விருதுக்கு தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளனர்.

பிரபல பழம்பெரும் இந்தி நடிகர் சசிகபூர், பழம்பெரும் இந்தி நடிகை வகிதா ரஹ்மான், பழம் பெரும் இந்திப்பட இசையமைப்பாளர் முகமது கயாம் (சினிமா), மத்திய வெளியுறவுத்துறை முன்னாள் செயலாளர் ஷியாம் சரன் (அரசுப்பணி) உட்பட 31 பேருக்கு பத்மபூஷண் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரபல நடிகைகள் தபு, கஜோல், நடிகர் இர்பான்கான், மலையாளப் பட இயக்குநர் ஷாஜி கருன் (சினிமா), பிரபல பின்னணிப் பாடகி உஷா உதுப் (இசை) உட்பட 84 பேருக்கு பத்மஸ்ரீ விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இவர்களில் 8 பேர் வெளிநாட்டு வாழ் இந்தியர்கள்.

பத்ம விருது அறிவிக்கப்பட்டுள்ள மொத்தம் 128 பேரில் இந்தியாவின் முதல் புகைப் படக் கலைஞரான ஹோமாய் வியாரவல்லா உட்பட 31 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.பத்மபூஷண் விருது கிடைத்தது பற்றி சினிமா பின்னணிப் பாடகர் எஸ்.பி. பாலசுப்ரமணியம் தெரிவிக்கையில்,

பத்மபூஷண் விருது எனக்கு கிடைத்திருப்பதில் மிக்க மகிழ்ச்சி. என்னை விட இந்த விருதுக்கு தகுதியானர்வர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு கொடுத்திருந்தாலும் சந்தோஷப்பட்டிருப்பேன். எனக்கு இப்போது கொடுத்திருக்கிறார்கள். விருதை வாங்கிக் கொள்வது என் கடமை.

இந்த நேரத்தில் என் தாய், தந்தை, என் குருமார்கள், நண்பர்கள் , விருதை வழங்கிய மத்திய அரசு ஆகியோருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிறையப் பேருக்கும் நன்றிக் கடன்பட்டிருக்கிறேன் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## லெபனானில் ஆட்சியை பிடிக்கிறது ஹிஸ்புல்லாஹ் அமைப்பு

(பெய்ரூட்)

லெபனான் நாட்டில் ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் சார்பில் பிரதமர் வேட்பாளராக ஒருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இதற்கு தற்போதைய காபந்து ஆட்சி நடத்தும் பிரதமர் ஷாத் ஹரிரியின் ஆதரவாளர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்துவதால், நாடு முழுவதும் பெரும் வன்முறை ஏற்பட்டுள்ளது.

லெபனானில் ஆளும் கூட்டணியிலிருந்து ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் 10 அமைச்சர்கள் கடந்த சில வாரங்களுக்குமுன்பு தங்களது ஆதரவை விலக்கிக் கொண்டதால், பிரதமர் ஷாத் ஹரிரியின் அரசு சிறுபான்மையானது எனினும் அதிபர் மிட்செல் சுலைமான், புதிய பிரதமர் தெரிவு செய்யப்படும் வரை ஹரிரியை காபந்து ஆட்சி நடத்தும்படி கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில் ஈரான் நாட்டின் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லாஹ் அமைப்பு லெபனானின் பிரதமர் வேட்பாளராக நஜிப் மெகாதி என்பவர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது. மொத்தம் உள்ள 125 பாராளுமன்ற உறுப்பினர்களில் 68 பேர் நஜிப் மெகாதியை பிரதமராக தெரிவு செய்ய ஆதரவு தெரிவித்துள்ளனர். இதற்கு தற்போதைய காபந்து பிரதமர் ஷாத் ஹரிரியின் ஆதரவாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்து கலவரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் தலைநகர் பெய்ரூட்டில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இதே போன்று டிரிபோலி நகரிலும் வன்முறை வெடித்துள்ளதால் லெபனான் அரசியல் சிக்கல் தீவிரமடைந்துள்ளது. (ஸ்ரீ-2)

## லாகூர், கராச்சி நகரங்களில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்

### 15பேர் பலி ; 80பேர் காயம்



(லாகூர்)

பாகிஸ்தானில், லாகூர், கராச்சி நகரங்களில் நேற்றுமுன்தினம் நிகழ்த்தப்பட்ட குண்டுவெடிப்புக்களில் 15பேர் கொல்லப்பட்டனர்.

ஷியா முஸ்லிம்களின் மத நிகழ்ச்சியை முன்னிட்டு லாகூரில் பிரமாண்ட பேரணி நடத்தப்பட்டது. அப்போது இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 4 பொலிஸார் உட்பட 13 பேர் அதே இடத்தில் உயிரிழந்தனர்.

70 பேர் படுகாயமடைந்தனர். இதேவேளை கராச்சியில் ஷியா முஸ்லிம்கள் சென்ற பேருந்து மீது மோட்டார் சைக்கிளில் சென்ற தற்கொலைக் குண்டுதாரி மோதியதில் 2 பொலிஸார் உயிரிழந்தனர். 10பேர் காயமடைந்தனர். (ஸ்ரீ-2)



ஆந்திர மாநிலம் ஐதராபாத்தில் நடந்து வரும் நாட்டிய விழாவில் நடைபெற்ற குச்சுப்புடி நடனத்தில் ஒரு காட்சியைப் படத்தில் காணலாம்.

## பிலிப்பைன்ஸில் பயணிகள் பேருந்தில் குண்டுவெடிப்பு

### நால்வர் பலி; 13 பேர் காயம்

(மணிலா)

பிலிப்பைன்ஸின் தலைநகர் மணிலாவில் பயணிகள் பேருந்து ஒன்றில் கடந்த 25 ஆம் திகதி குண்டுவெடித்தது. இதில் 4 பேர் கொல்லப்பட்டனர். 13 பேர் காயமடைந்தனர்.

மணிலாவில் உள்ள முக்கிய வீதியில் பயணிகளுடன் பேருந்து சென்று கொண்டிருக்கும் போது குண்டுவெடித்தது. முதற்கட்ட விசாரணையில் அந்தக் குண்டு, பயணிகளின் இருக்கைக்குக் கீழ் வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

இது தீவிரவாதிகளின் சதி வேலையாகத்தான் இருக்கும் என்று அந்நாட்டு பொலிஸார் சந்தேகிக்கின்றனர். ஆனால் , இதற்கு எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் உடனடியாகப் பொறுப்பேற்கவில்லை.


இந்தத் தாக்குதலுக்கு அந்நாட்டு ஜனாதிபதி பெனிக்கோ அகினோ கண்டனம் தெரிவித்துள்ளார். சமீபகாலமாக நாட்டுக்கு பயங்கரவாத அச்சுறுத்தல் அதிகரித்து வருவதாக அவர் கவலை தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு உள்ள பயங்கரவாத அச்சுறுத்தல் குறித்து மறு ஆய்வு செய்யுமாறு பாதுகாப்புப் படைக்கும் , உளவுத்துறைக்கும் பெனிக்கோ உத்தரவிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# எங்களவனை அடிக்கும் போது பாயாத சட்டம் சிங்களவனை அடிப்பேன் என்ற போது பாய்கிறதே

*"என் தேசத்தை நாசமாக்கிய ஒரே சொல்... இலவசம்!"*
-குன்றக்குடி அடிகளார்

ஆனால் "ஏழைகள் இருக்கும்



வரை இலவசங்கள் தொடரும்!" என்கிறார் தன்மானத் தமிழர்களைக் காக்கப் பிறந்த தலைவர் கருணாநிதி. இலவசங்கள் தொடரும் வரை ஏழைகள் தொடருவார்கள் என்கிற பேருண்மை அந்தப் பெரியவருக்குத் தெரியாது போலும்.

"பசியில் வாடுபவனுக்கு மீனைக் கொடுக்காதே... மீன் பிடிக்கக் கற்றுக்கொடு!" என்கிற மேலைநாட்டுப் பொன்மொழி இந்த ஏழை நாட்டுத் தலைவர்களுக்கு ஏன் புரியாமல் போனதோ?

தொலைக்காட்சி இலவசம், உடுப்பு இலவசம், அடுப்பு இலவசம் என அனுதினமும் ஓர் அறிவிப்பை வெளியிட்டு கையேந்தும் பெருமக்களை பெருக்கிக் கொண்டே போகிறது இந்த அரசாங்கம்.

65ஆண்டு கால சுதந்திரத்தில் 45 ஆண்டுகள் இந்தத் தாய்த் தமிழகத்தை திராவிட இயக்கங்கள் ஆண்டிருக்கின்றன. இன்றைக்கு இலவசத்தை மகத்தான திட்டமாக வாய் வலிக்கச் சொல்பவர்கள் இத்தனை காலங்கள் ஆண்டும் என் மக்களைக் கையேந்தவைத்த கயமைக்குப் பொறுப்பு ஏற்பார்களா?

கலைஞரின் 'இளைஞன்' படம் தமிழ்த் திரையுலகத்தின் புரட்சியாய், புகழாரக் கூட்டத்தால் கொண்டாடப்படுகிறது. மாக்ஸிம் கார்க்கியின் "தாய்" நாவலை தாய்க் காவியமாக வடித்த முதல்வர் பெருமகனாருக்குச் சொல்கிறேன்... ஐயா கார்க்கியின் எழுத்துகள் மேல் நீங்கள்கொண்டு இருக்கும் ஈர்ப்பும் பிரியமும் என்னை வியக்க வைக்கிறது. கார்க்கி எழுதிய சாலச் சிறந்த வாக்கியம் ஒன்றை உங்களுக்குச் சொல்கிறேன்.

"பிச்சை போடுபவனைக் காட்டிலும் அருவருக்கத்தக்கவன் யாரும் இல்லை. பிச்சை எடுப்பவனைக் காட்டிலும் பரிதாபத்துக்கு உரியவன் யாரும் இல்லை!" கார்க்கியின் எழுத்துக்களைப் பல சந்தர்ப்பங்களில் புகழ்ந்து உரைத்திருக்கும் நீங்கள் இந்த வரிகளுக்கு என்ன ஐயா பதில் சொல்ல முடியும்? உடனே பிச்சைக்கும் இலவசத்துக்கும் வித்தியாசம் இருக்கிறது என வழக்கம்போல் விளக்கப் புராணம் பாடாதீர்கள். தனி மனிதனுக்குப் போட்டால் பிச்சை... தமிழ் நாட்டுக்கே போட்டால் இலவசமா?

எங்களின் பணத்தை எங்களுக்கே பிச்சையாக்கும் வித்தையை இத்தனை காலம் நீங்கள் பயன்படுத்தாமல் இருந்ததே ஆச்சர்யம்தான்.

இலவசத் திட்டங்களுக்காக அரசாங்கம் இழக்கும் தொகையை நீங்கள் எதன் மூலமாக ஈடுகட்டுகிறீர்கள்? மது விற்பதன் மூலமாக ஏழைக் குடியாவனவன் சாராயம் காய்ச்சினால் சட்டப்படி அது குற்றம்.அரசாங்கமே சாராயம் காய்ச்சினால் அது திட்டம். நல்லா இருக்கிறதய்யா உங்கள் நியாயம்? தீபாவளி தினத்தில் மட்டும் ரூபா 90 கோடிக்கு சாராயம் விற்றதாக இந்த அரசாங்கம் சாதனை அறிக்கை

**13 சிறை மீண்ட சீமான் எழுதும் 'திருப்பி அடிப்பேன்' அதிரடி அனல் கனல் தொடர்...**

வெளியிடுகிறது. வயிற்றுக்கு விஷம் வைத்துவிட்டு வாய்க்கு உணவு கொடுப்பது தான் உங்கள் சாதனையின் மகத்துவமா ஐயா?

இலவசம் என்றால் என்ன பொருள் உங்கள் அகராதியில்? பல்துறைப்பட்ட வருமானத்தின் அரசுத் திட்டங்களைச் செயற்படுத்தியதுபோக மீதம் இருக்கும் மேலதிக வருமானத்தொகையை வைத்து மக்களுக்கு ஏதாவது வழங்கினால் அதற்குப் பெயர்தான் இலவசம். ஆனால் ரூபா 80 ஆயிரம் கோடியை தமிழகத்தின் கடனாக ஏற்றிவைத்து விட்டு இழுத்துக்கோ பறிச்சுக்கோ என்கிற நிலைமையிலும் இலவசத்தை வழங்கினால் அதற்கு உண்மையான அர்த்தம் "உள்நோக்கம்" என்பது தானே! உடனே அறிவார்ந்தவரும் மூத்த அமைச்சருமான ஐயா அன்பழகனார் அறிவிக்கிறார்... "தமிழக அரசின் ரூபா 80 ஆயிரம்

## நாவைச் சுழற்றியே நாட்டைச் சுழற்றும் முதல்வர் கருணாநிதியின் அபூர்வ ஆட்சி

கோடி கடன் தமிழக மக்களை பாதிக்காது!" அப்படி என்றால் எங்களின் கடனை கன்னடக்காரன் கட்டுவதாகச் சொல்லி இருக்கிறானா? இல்லை தெலுங்குக்காரன் திரட்டிக் கொடுப்பதாக சொல்லியிருக்கிறானா? இலவசங்கள் தொடர்ந்து கொண்டே போகட்டும்...என்றைக்கோ ஒருநாள் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு இலவசங்களைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டால் தமிழகத்தின் நிலை என்னாகும் என்பது உங்களின் புத்திக்குப் பலனாகவில்லையா முதல்வரே? இலவசம் இல்லாமல் போனால் பிறர் சவம் என்றாலும் பிய்த்துத் தின்னும் நிலை வந்துவிடாதா? இத்தனை காலம் உண்டபடியே உறங்கியவனை ஒரேநாளில் உழைப்புக்குப் பழக்கப்படுத்திவிட முடியுமா? கொலை, கொள்ளை வழிப்பறி என இந்த நாடே சுடு காடாகி விடாதா? அப்படி ஒரு நிலை வரத்தானே இத்தனை இலவசங்களை அறிவித்து, எம் மக்களின் சொரணைக் குச் சுருக்குப் போட்டு விட்டீர்கள்?

தேர்தல் நெருங்க... நெருங்க.. எப்படி எல்லாம் இலவசங் களை அறிவிக்கலாம் என மூளையைக் கசக்கி முப்பொழுதும் யோசிக்கிறீர்கள். வாரம் ஐந்து முட்டை என அறிவித்து குழந்தைகளைக் குதூகலிக் கவைத்தீர்கள்... இத் தனை காலம் ஒரு முட்டை போட்ட கோழிகள் திடீரென ஐந்து முட்டைகள் போட ஆரம்பித்து விட்டதா ஐயா? நாலரை ஆண்டு காலம் ஏழைகள் எந்தக் குடிசையில் வாழ்ந்தாலும் சரி என நினைத்த நீங்கள், இப்போது திடீரென வீடு வழங்கும் திட்டத்துக்கு வித்திட்டு இருக்கிறீர்கள். கடகட வேகத்தில் மூன்று இலட்சம் வீடுகளைக் கட்டவைக்கும் நீங்கள், அடுத்த மூன்று இலட்சம் பேருக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கான பற்றுச் சீட்டைக் கொடுத்து இருக்கிறீர்கள். "எங்கள் ஆட்சி மீண்டும் வந்தால் உங்களுக்கு வீடு நிச்சயம்!" என் பதை ஏழைகள் மனதில் எவ்வளவு சூசகமாக ஏற்றி இருக்கிறீர்கள் பார்த்தீர்களா? அடிக்கத் திட்டமிட்டு இருக்கும் கொள்ளையில் மக்களையும் மறைமுகப் பங்குதாரர்களாக மாற்றுவதற்குத்தானே இலவசம் என்கிற பெயரில் இந்த கையூட்டு?


ஆனால் உங்கள் நெஞ்சத்தில் கைவைத்துச் சொல்லுங்கள்.... இலவசமாக்கப்பட்டு இருக்க வேண்டியது கல்வியும் மருத்துவமும்தானே... ஏழைக்கு ஓர் உயிர்; பணக்காரனுக்கு ஓர் உயிர் என்கிற பாராமுக நிலைப்பாடுதானே இன்று வரை தொடர்கிறது. கல்வி ஏற்றத் தாழ்வுகளை இன்று வரை இந்த அரசாங்கத்தால் களைந்து எடுக்க முடியாமல் போனது ஏன்?

ஒரு ரூபாய்க்கு அரிசி போட்டு, "உழைப்பு தேவை இல்லை என்கிற சோம்பேறித்தனத்தை விதைப்புச் செய்தீர்கள். புத்தியை மழுங்கடிக்க இலவசத் தொலைக்காட்சி கொடுத்தீர்கள். எவன் வீட்டில் இழவு விழுந்தாலும் தன் வீட்டில், "மானாட மயிலாட" ஆடினால் சரி என்கிற சாக்கடை எண்ணத்துக்குள் ஒவ்வொரு தமிழனையும் தள்ளினீர்கள். உங்களின் இலவசம் ஏற்படுத்திய பாதிப்பு என்ன என்பதை காவிரிக் கரையோர விவசாயிகளிடம் கேட்டுப் பாருங்கள்... கூலிக்கு வேலை இல்லாமல் திண்டாடிய காலம் போய், வேலைக்கு ஆள் இல்லாமல் அல்லாடும் காலம் உருவாகி இருக்கிறது. இது ஆரோக்கியமான மாற்றம் அல்ல ஐயா... அயோக்கிய மாற்றம்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் விவசாய மாவட்டங்களில் பட்டினிச் சாவுகள் தொடர்ந்த போது, அரசாங்கமே சோறு போடும் என அறிவித்தார் அன்றைய முதல்வர் ஜெயலலிதா. கூட்டுப் பொறியலோடு குக்கிராமங்கள் தோறும் சாப்பாடு தயாரானது. அப்போது நீங்கள் சொன்ன வார்த்தைகள் என்ன தெரியுமா ஐயா.... "ஊருக்கே படியளந்த மக்களை சோற்றுக்குக் கையேந்த வைத்து விட்டார் ஜெயலலிதா!"

அந்த அம்மையாரின் நிலைப்பாட்டை நான் நியாயப்படுத்தவே இல்லை. ஆனால், அன்றைக்கு எம் விவசாய வர்க்கம் கையேந்தியதைக் காணச் சகிக்காத நீங்கள், இன்றைக்கு ஒரு ரூபாய்க்கு அரிசி போடுகிறீர்களே... நீங்கள் அரிசி போட்டால், அது மகத்தான திட்டம்... அந்த அம்மையார் ஆக்கிப் போட்டால் அது குற்றமா?

நாவைச் சுழற்றியே நாட்டைச் சுழற்றும் உங்களின் அபூர்வ ஆட்சியை மீண்டும் தக்கவைக்க நீங்கள் தீட்டி வரும் சில திட்டங்



கள் பற்றிக் கேள்விப்பட்டேன். "ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஓர் அலைபேசி இலவசம்" என அறிவிக்கப் போகிறீர்களாமே... தொலைக் காட்சியை இலவசமாக வழங்கி இணைப்புக்கு எங்களிடமே பணம் பறித்ததைப்போல, அலை பேசியை இலவசமாக வழங்கி இணைப்புக்கு எந்த நிறுவனத்திடம் பேசி வைத்திருக்கிறார்களோ?

உலகத்தில் தமிழகத்தைத் தவிர வேறு எங்கேயுமே சுயமரியாதைக்கு கட்சி தொடங்கியதாகவோ, தன்மானத்துக்காக இயக்கம் தொடங்கியதாகவோ, சரித்திரம் இல்லை. ஆனால் இன்றைக்கு அவமரியாதையின் அடையாளமாகவும் அவமானத்தின் சின்னமாகவும் எம் மக்கள் மாறிக் கிடக்கிறார்களே... அடுப்பு இலவசம், உடுப்பு இலவசம், மின்சாரம் இலவசம், சம்சாரம் இலவசம் (இலவசத் திருமணங்கள்),முட்டை இலவசம், சட்டை இலவசம் என அள்ளி வழங்கும் இந்த அரசாங்கம் தேர்தல் நெருங்குவதால் சீக்கிரமே இன்னொரு இலவசத்தையும் அறிவிக்கப் போகிறது. இனமானம் மிகுந்த தன்மானம் தளும்பிய தமிழ் பெருமக்களே....அதிர்ச்சியாகத் தான் இருக்கிறது. ஆனாலும், காத் திருங்கள்... "இல்லங்கள் தோறும் பிள்ளைகளும் இலவசம்!"

(வளரும்)

நீங்கள் எப்படிப்பட்ட வேலையைப் பார்த்தாலும் அதை இதயபூர்வமாக விரும்பி அக்கறையுடன் செய்யுங்கள். ~ புனித பைபிள்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அரச பணிக்காகக் காத்திருக்கும் கலாசாரத்தை உடைப்பது யார்?

அரச வேலைக்கு தனியான கௌரவம் கொடுக்கும் மரபு எங்கள் தமிழினத்தில் நிலை பேறு அடைந்து விட்டது.

அதன் காரணமாக அரச வேலை தவிர்ந்த எந்த வேலைக்கும் மதிப்பளிக்கும் இயல்பு எங்களிடம் குறைவு என்றே கூறவேண்டும்.

இதனால் அரச வேலைக்காக காத்திருந்து காலங் கழிக்கும் கலாசாரம் சோகமான முடிவுகளை தந்த அனுபவங்களை நாம் மறக்கலாகாது.

வீட்டுப் பொருளாதாரம் அரச சம்பளத்திலும், ஓய்வூதியத்திலும் தங்கியிருந்தமையால், பலருக்கு ஓய்வுக்குப் பின்பான காலம் வேதனையாகவே முடிந்ததெனலாம்.

அரச வேலைக்காக காத்திருக்கும் இயல்பு பட்டதாரிகளையும் விட்டுவிடாததனால் அவர்களும் தங்கள் பட்டம், துறை, கற்றதை பிரயோகிக்கும் சந்தர்ப்பம் என எதற்கும் இடம்தராமல் ஏதாவது ஓர் அரச வேலை என்பதற்காக காத்திருக்கின்றனர்.

அரசாங்கமோ தான் வழங்கக் கூடிய சகல அரச வேலைகளையும் ஒன்று திரட்டி அந்தத் தொகைக்கு மேலாக படைத்துறையில் வேலை வாய்ப்பை வழங்கிவிட்டு, ஏனைய துறைகளுக்கு நியமனம் வழங்க முடியாமல் திண்டாடுகிறது.

இதையும் மீறி வேலை அற்ற பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினால், அந்த ஆர்ப்பாட்டத்தைத் தணிப்பதற்காக நியமனம் வழங்குவது போன்ற பாவனையும், அந்தப் பாவனைக்காக சிலருக்கு நியமனம் வழங்குதலும் இடம்பெறும்.

அதில் சங்கீதப் பட்டதாரிக்கு முகாமைத்துவத்தில் நியமனமும், நடனப் பட்டதாரிக்கு மனையியல் துறையில் நியமனமும் சித்திரப் பட்டதாரிக்கு கணக்காய்வில் நியமனமும் வழங்கப்படும்.

என்ன செய்வது! எங்களுக்கு அரச வேலை மட்டுமே தேவை- அது நமக்குப் பொருத்தமா? இல்லையா? என்ற ஆய்விற்கெல்லாம் இடம் கிடையாது.

சங்கீதப் பட்டதாரி, தான் சார்ந்த சங்கீதத் துறையில் ஈடுபட்டால் தனது திறனை வளர்த்துக் கொள்ளவும் சங்கீதத்தில் திறனுள்ள பிள்ளைகளை அத் துறையில் உயர்த்தி விடவும் முடியும் அல்லவா?

என்ன செய்வது! எங்களிடம் சுயதொழில், விவசாய முயற்சி, உற்பத்தி நடவடிக்கை என்பனவெல்லாம் நம்பிக்கை அற்ற தொழில்கள்.

ஆக! அரச நியமனம் ஒன்றுதான் நிரந்தரம். ஓய்வூதியம் கிடைக்கும் என்ற பழங்காலத்துச் சிந்தனையை உடைக்க சமகாலத்துப் பட்டதாரிகளாலும் முடியாமல் இருப்பது வேதனையிலும் வேதனை.

# வவுனியாவில் 3 பிரதேச சபைகளுக்கு கூட்டமைப்பு நேற்று மனுத்தாக்கல்

வவுனியா மாவட்டத்தில் உள்ள வவுனியா வடக்கு (நெடுங்கேணி), வவுனியா தெற்கு (தமிழ்ப் பிரதேச சபை), வெங்கல செட்டிக்குளம் பிரதேச சபை ஆகிய மூன்று பிரதேச சபைகளுக்கும் நேற்றுப் புதன்கிழமை பகல் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்டத்திற்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கீகரிக்கப்பட்ட முகவருமான சிவசக்தி ஆனந்தன் வேட்பு மனுக்களை வவுனியா மாவட்டத் தேர்தல்கள் காரியாலயத்தில் கையளித்தார்.

இவருடன் தமிழ் மக்கள் விடுதலைக் கழகத்தின் முன்னைநாள் நகரபிதாவும் தற்போதைய நகரசபை உறுப்பினருமான ஜீ.ரி.லிங்கநாதன், இலங்கை தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்டச் செயலாளர் டேவிட் நாதன் மற்றும் வவுனியா நகர சபை உறுப்பினர்கள் மற்றும் மூன்று பிரதேச சபைகளுக்கான வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வேட்பு மனுக்களைக் கையளித்த பின்னர் சிவசக்தி ஆனந்தன் வேட்பாளர்கள் மத்தியில் உரையாற்றினார். அப்போது அவர் முல்லைத்தீவில் அரசாங்கம் தனது வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடாமல் சிறி ரங்காவின் பிரஜைகள் முன்னணியின் பின்னால் ஒளிந்துகொண்டு போட்டியிடுவதே எமக்குக் கிடைத்த முதல் வெற்றி. இதன் மூலம் வடக்கு- கிழக்கில் அனைத்து இடங்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றுவது உறுதியாகிவிட்டது.

நாம் நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு தேர்தல் விஞ்ஞாபனத்தை வைத்து அதற்கான அங்கீகாரத்தை கேட்டிருந்தோம். அதனை மக்கள் ஏற்றுக்கொண்டு எமக்கு வாக்களித்தனர். அதனைப் போன்று இத் தேர்தலிலும் நாம் எமக்கு என்ன தேவை என்பதையும் எமது அரசியல் தீர்வு தொடர்பான யோசனைகளையும் முன்வைத்து மக்களிடம் கேட்கப் போகின்றோம் என்றார். (ச-5)

# வன்னியில் அறுவடை செய்யப்படும் நெல்லை நாவற்குழியில் களஞ்சியப்படுத்தத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

வன்னியில் அறுவடை செய்யப்படும் நெல்லை நாவற்குழியில் களஞ்சியப் படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

நாவற்குழி அரச உணவுக் களஞ்சியத்திற்கு சென்ற பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் வன்னியில் அறுவடை செய்யப்படும் நெல்லை அங்கு களஞ்சியப்படுத்துவது தொடர்பாக ஆராய்ந்துள்ளனர்.

கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்களில்தற்போது அறுவடை நடைபெற்று வரும் நிலையில் அங்கு நெற் களஞ்சியங்கள் இல்லாததால் நெற்செய்கையாளர்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

இவ் விடயம் குறித்து அமைச்சர் மற்றும் ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதை அடுத்து நேற்று அங்கு விஜயம் மேற்கொண்ட இருவரும் நெல்லை களஞ்சியப்படுத்துவதற்கு ஏற்ற ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இது தொடர்பாக உலக உணவுத் திட்ட களஞ்சியக் காப்பாளர் மற்றும் மாவட்டச் செயலக களஞ்சியக் காப்பாளர் ஆகியோருடன் கலந்துரையாடியதன் பிரகாரம் அறுவடை செய்யப்படும் நெல் அங்கு களஞ்சியப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

# மணவாளக்கோல விழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் மணவாளக் கோல விழா இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் முற்பகல் 9 மணிக்கு சங்காபிஷேக கிரியைகள் ஆரம்பமாகி 1008 சங்காபிஷேகம், விசேட பூசை என்பன நடைபெறும்.

பிற்பகல் 4.30 மணிக்கு விசேட பூசை, மேளக்கச்சேரி, வசந்தமண்டபப் பூசை, திருவூஞ்சல் விழா என்பவற்றைத் தொடர்ந்து கருணாகரப் பிள்ளையார் பூந்தண்டில் வீதிவலம் வருவார். (ஸ்ரீ)

# மோதல் சம்பவங்களை அடுத்து அ'புரம் சிறை நிர்வாகத்தில் மாற்றம்

(கொழும்பு)

அனுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களை அடுத்து தற்போதைய நிர்வாகம் மாற்றப் பட்டுள்ளது.

புதிய நிர்வாகம் ஒன்று உடனடியாக பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வதாகவும் இடம்பெற்ற மோதல்கள் தொடர்பாக உயர் மட்ட விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் சிறைச்சாலைக்குச் சென்ற புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற அமைச்சருடன் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் வி.ஆர்.டி. சில்வாவும் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டார்.

இந்தச் சிறைச்சாலையில் கைதிகளுக்கும் சிறைக் காவலர்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களினாலும், துப்பாக்கிச் சூட்டினாலும் மூன்று கைதிகள் உயிரிழந்துள்ளதுடன் 08 சிறைச்சாலை அதிகாரிகள உட்பட 25 பேர் காயமடைந்துள்ளனர்.

சுமார் ஏழு மணிநேரம் இடம்பெற்ற இந்த மோதல்கள் மற்றும் துப்பாக்கிச் சூட்டினால் சிறைச்சாலையில் பெரும் களேபரம் ஏற்பட்டதுடன் சிறைச்சாலைக்கு வெளியேயும் பெரும் பதற்றம் நிலவியது.

இவ் விவகாரம் தொடர்பாக அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து அனுராதபுரம் சிறைச்சாலையை நிர்வகிக்க உடனடியாக புதிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இந்தச் சிறைச்சாலையின் பிரதம சிறை அதிகாரியும் பிரதம சிறை அத்தியட்சகரும் மாற்றப்படாது இவர்களுக்கு மேலாக சிறைச்சாலையை நிர்வகிக்க அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக உயர் மட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். (ச-5)

# உன் நடத்தையும் என் ஆசீர்வாதமும்- பாபா

பாபா இந்த யுகத்தின் தலைசிறந்த போதகராவார். அவருடைய சொற்கள் ஒவ்வொன்றும் ஒரு மந்திரம். ஒவ்வொரு உரையும் உபநிடதம். அவர் பாடும் ஒவ்வொரு பாடலும் ஒரு வேதம். அவர் அளிக்கும் தனிப்பட்ட பேட்டி விசுவாசத்திற்கான புனித நீராட்டு. தெய்வீக உள்ளத்தின் நடுப்பகுதியை நோக்கிச் செல்லும் புனித யாத்திரை. விதியையும் இறைவனின் மகிமையையும் பிரித்தறியும் அறிவுத் தெளிவு. திருத்த முடியாதவர்கள், ஒத்துழைக்காதவர்கள், விசுவாசமற்றவர்கள், ஆன்மீக ஈடு பாட்டில் குழந்தைப் பருவத்தில் உள்ளவர்கள் அனைவருக்கும் பாபா அறிவுரை புகட்டுகின்றார். இவர்களைத் தன் பிடிக்குள் கொண்டு வந்து விடுகின்றார்.

திருத்தி, ஆறுதலளித்து உள்ளொளி பெற்றவர்களின் குழுவில் இருவரும் ஒருவராகிவிட வேண்டும் என்று பாபா விரும்பும் ஒரு சிலருக்குசில இடைஞ்சல்களை அளிக்கின்றார், அன்பைப் பொழிகின்றார். இனிய தோழமையோடு வழி காட்டுகின்றார். கடுமையாக எச்சரிக்கின்றார். சிறந்த போதகரான பாபா தாம் யாருக்கு உபதேசிக்க விரும்புகின்றாரோ காலநேரம் எதுவென்று இல்லை. அடியான் தூக்கத்தில் இருந்தாலும் சரி, குளியல் அறையில் ஸ்நானம் செய்து கொண்டு இருந்தாலும் சரி விட்டு வைப்பதில்லை.

உண்மையை நிலைநாட்டவும், பொய்மையை வேரோடு கிள்ளி எறியவும், மக்களின் வாழ்வினில் நீதி தர்மங்களை உயிர்ப்பிக்கவுமே தாம் வந்திருப்பதாக பாபா அறிவிக்கின்றார். சாயி யுகமான இந்தக் கால கட்டத்தில் சாயியின் கருத்துக்களை போதிக்கும் புதிய கல்விக் கழகமாக சாயி அடியார் கூட்டம் திகழும் என அருளுகின்றார். உபதேசத்தைக் காட்டிலும் உதாரணம் சிறந்தது. நாம் நடந்து கொள்ளும் தன்மையைப் பொறுத்தே வருங்கால சந்ததியினரின் தன்மையும் அமையும்.


இராமனிடம் அம்பும் வில்லும், கிருஷ்ணரிடம் சக்ராயுதமும், முருகனிடம் வேல் போலவும் அழிவையுண்டு பண்ணும் ஆயுதம் என்னிடம் இல்லை, அகற்றுவதைக் காட்டிலும் கற்பிப்பதிலும், அழிப்பதைக் காட்டிலும் உபதேசிப்பதிலும் நம்பிக்கையுடையதே இந்த அவதாரம். இதனால் நன்மக்கள் இன்னும் நன்மக்களாகவும், தீய பாதையில் சென்றவர்கள் தீயதைக் கைவிட்டு திருந்தி நடக்கவும் தூண்டப்படுகின்றார்கள்.



எனவே உங்களுடைய வாழ்நிலை முழுப் பொறுப்பும் என்கையில் தங்கியுள்ளது. ஆனால் ஒரு மாணவனின் திறமை அவனிடமும், ஆசிரியரிடமும் தங்கியி ருப்பது போலவே உன்னுடைய நடத்தையும், என்னுடைய ஆசீர்வாதமும் சேர்ந்தே உன் பிறவிப்பயன் அமையும் என அருளுகின்றார் பக வான் பாபா.

ஜெய் சாய்ராம் யாதவன்

# கணனி உலகில் புத்தம் புதிய வரவுகள்



ஆண்டுதோறும் ஒருமுறை, உலக அளவில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் கூடும் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி நடைபெறும். இதனை Consumer Electronics Show என அழைக்கின்றனர்.

இந்த ஆண்டு லாஸ்வேகாஸ் நகரில் இந்த கண்காட்சி நடைபெற்றது. இதில் தகவல் தொழில்நுட்பப் பிரிவில் இயங்கும் நிறுவனங்கள் தாங்கள் அடுத்து கொண்டு வர இருக்கும் சாதனங்களைக் காட்சிக்கு வைப்பார்கள். இதன்மூலம் வர்த்தகர்கள் அவற்றிற்கான விற்பனை உரிமையினைப் பெற போட்டி போடுவார்கள். மேலும் சில சாதனங்களைத் தாங்கள் தயாரிக்கும் சாதனங்களில் இணைக்கவும் பலர் இந்தக் கண்காட்சியில் வட்டமிடுவார்கள். இந்த ஆண்டு நடைபெற்ற கண்காட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட சில அரிய கண்டுபிடிப்புக்களை, தயாரிப்புக்களை, வரும் ஆண்டில் நமக்குக் கணனி சார்ந்து கிடைக்க இருப்பவை பற்றி இங்கு காணலாம்.

### ◆ கேம்ஸ் கணனி

விளையாட்டை மையப்படுத்தி தனியே சிறிய அளவிலான கணனிகள் உருவாக்கப்படுவது வாடிக்கையாகி விட்டது. Razer Switchblade என்ற பெயரில் 7 அங்குல அளவில் மல்ட்டி டச் கணனி ஸ்கிரீனுடன் கூடிய, நெட்புக்கினைக் காட்டிலும் சற்றுப் பெரிய கணனி ஒன்று தயாராகி விற்பனைக்கு வருகிறது. இதுவரை வெளியிடப்படாத ஆட்டொம் (Atom) புரோசசர் பயன்படுத்தப்பட்டுள்ளது. விண்டோஸ் 7 சிஸ்டம், 128 ஜிபி சாலிட் ஸ்டேட் டிஸ்க், வை-பி,3 ஜி எனப் பல புதிய வசதிகளைத் தரும் பொருட்கள் இணைக்கப்பட்டுள்ளன. ஒரு நெட்புக் கணனி விற்பனை செய்யப்படும் விலையில் இதனை எதிர்பார்க்கலாம்.

### ◆ புரோசசர்கள்

மைக்ரோசொப்ட் நிறவனத்தின் அடுத்த விண்டோஸ் ஒரு சிப்பில் இணைத்துப் பதியப்பட்டுக் கிடைக்கும் வாய்ப்புகள் உள்ளன. இதன் மூலம் விண்டோஸ் சிஸ்டம் தரப்படும் விதம் மற்றும் இயக்கத்தில் அதிரடி மாற்றங்கள் வரலாம். இதனை (SoC System on Chip) என அழைக்கின்றனர்.சிஸ்டம் சிப்பிலேயே தரப்படுவதால், கணனியின் பல பாகங்களுக்கும், ஒப்பரேட்டிங் சிஸ்டத்திற்கும் தகவல் பரிமாற்ற நேரம் முற்றிலுமாகக் குறைக்கப்படுகிறது. இதனால், கணனி மிக அதிக வேகத்தில் இயங்கும்,டேப்ளட் பிசிக்களுக்கு இது மிக உகந்ததாக இருக்கும்.

மைக்ரோசொப்ட் இந்த முயற்சிக்கு Nv IDIA ,Texas Instruments, and Qualcomm ஆகிய நிறுவனங்களின் உதவியை நாடியுள்ளது. இந்தக் கண்காட்சியில் ஆர்வத்தினைத் தூண்டும் இன்னொரு விடயம் இன்டெல் நிறுவனத்தின் Sandy Bridge CPU ஆகும். இந்த சிப்பினை சப்போர்ட் செய்திடும் வகையில் பல நிறுவனங்கள் தங்கள் கணனிக் கட்டமைப்பினை உருவாக்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இத்துடன் பல ஆண்டுகளாகக் காட்டப்பட்டு வந்த, ஏ.எம்.டி. நிறுவனத்தின் ப்யூஷன் (Fusion) புரோசசர்கள் தற்போது விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

### ◆ மெமரி

இந்த ஆண்டு கண்காட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட மெமரி மற்றும் ஸ்டோரேஜ் சாதனங்கள் எண்ணிக்கை, இதுவரை இல்லாத வகையில் இருந்தன.சாம்சங் நிறுவனம் உலகின் முதல் DDR4 RAM சிப்பினை வெளியிட்டுள்ளது. நம்மில் பலர் இன்னும் DDR2 RAM சிப்பினையே பயன்படுத்தி வருகிறோம். சாம்சங் வெளியிட்டுள்ள இந்த சிப்பில் 30 நானோ மீற்றர் சிப்கள் உள்ளன.




தற்போது பயன்பாட்டில் உள்ள DDR3 RAM சிப்பினைக் காட்டிலும் இரண்டு மடங்கு வேகத்தில் இந்த சிப்கள் இயங்குகின்றன. ஆனால் குறைவான மின்சக்தியைப் பயன்படுத்துகின்றன. ஒரு விநாடியில் 2.133 கிகா பிட்ஸ் தகவல்களைப் பரிமாறுகின்றன. இதனை 4 கிகா பிட்ஸ் ஆக மாற்றித் தரமுடியும் என சாம்சங் அறிவித்துள்ளது.

### ◆ ஸ்டோரேஜ்

உங்களுக்கு வேடிக்கையான ஒரு சாதனம் வேண்டுமென்றால், லெக்ஸார் நிறுவனம் வழங்கும், சாதாரண பிளாஷ்ட் ரைவ் அளவு உள்ள Echo MXஎன்னும் ஸ்டோரேஜ் சாதனத்தைப் பார்க்கலாம். தன் மெமரி அளவு 128 ஜிபி. விணாடிக்கு 32 எம்பி தகவல்களைப் பரிமாறுகிறது. 17 எம் பி அளவில் எழுதுகிறது.

இது உங்களுக்கு மிகச் சாதாரணமாகத் தோன்றினால், Victorinox Secure என்ற நிறுவனம் வழங்கும் சாலிட் ஸ்டேட் டிஸ்க் கொண்ட பிளாஷ் ட்ரைவினைக் காணலாம். இதன் கொள்ளவு 256 ஜிபி. இது ஒரு ஸ்விஸ் ஆர்மி கத்தி போன்ற தோற்றத்தில் உள்ளது. உலகின் மிகச் சிறிய சாலிட் ஸ்டேட் டிஸ்க் என இது அறிமுகப்படுத்தப்பட் டுள்ளது. இதுவும் போதவில்லை என்றால், Rocstor என்னும் நிறுவனம் அறிமுகப்படுத் தியுள்ள 750 ஜிபி கொள்ளளவு கொண்ட ஹாாட் டிஸ்க்கினைக் கொள்ளலாம்.

மேலே சொல்லப்பட்ட அனைத்தும் புதியனவாகவும், அனைவரின் கவனத்தைக் கவர்வதாகவும் இருந்தாலும், ஒரு சாதனம் பலரை வியப்பில் ஆழ்த்தியது. அது வெறும் கணனி கேபின் தான். Zalmann நிறுவனம், ஜி.எஸ்.1200 என்ற பெயரில் அறிமுகப்படுத்திய கணனி கேபின். இது ஏதோ சயின்ஸ் மூவியில் அறிமுகமாகும் சாதனம் போலத் தோற்றமளிக்கிறது. இதில் புரோசசர்களைக் குளிர வைக்க நான்கு மின்விசிறிகள், ஏழு ஹாாட் டிஸ்க்கினை அமைக்க வசதி, மேலாக, எளிதாக அணுக நான்கு யு.எஸ்.பி. போர்ட், இ ற்டா (eSATA) சப்போர்ட், திரவம் பயன்படுத்தி கூலிங் செய்திட வசதி எனப் பல புதிய அம்சங்களைக் கொண்டதாக உள்ள இந்த கேபின் விரைவில் விற்பனைக்கு வரவுள் ளது.

இன்னும் பல புதிய சாதனங்கள், லாஸ் வேகாஸ் கண்காட்சியில் இடம்பெற்றன. இவை அனைத்தும் எப்படியும் இந்த ஆண்டிற்குள் இலங்கையிலும் விற்பனையாகும் என எதிர்பார்க்கலாம்.




# 2011 ஆம் ஆண்டில் நிறுவனங்கள் தரப்போவது என்ன?

புத்தாண்டில் கணனி மற்றும் இணையப் பயன்பாட்டில் நிறைய மாற்றங்கள் ஏற்படப் போகின்றன என்று எல்லோரும் கணித்துள்ளனர். பலர் தொழில்நுட்பத்தில் ஏற்படப்போகும் மாற்றங்கள் குறித்தும் பல எதிர்பாாப்புக்களைச் சொல்லி வருகின்றனர். நாம் இத்துறையில் இயங்கும் நிறுவனங்கள் வாரியாக, அவை என்ன திட்டமிட்டுள்ளன, அவற்றிடமிருந்து என்ன எதிர்பார்க்கலாம் என்று இங்கு பார்க்கலாம்.

### அப்பிள்

2010 ஆம் ஆண்டில் மிகவும் வெற்றிகரமாக, புத்தம் புதிய மல்ட்டி டச் டேப்பிலட் பிசியினை அறிமுகப்படுத்தி, பல இலட்சக் கணக்கில் அதனை விற்று சாதனை படைத்தது அப்பிள் நிறுவனம். இனி அந்த வெற்றியைத் தொடர்ந்து தக்கவைக்க வேண்டியது இந்த நிறுவனத்திற்கு அவசியமாகின்றது. மேலும் இதே டேப்பிலட் பிசி சந்தையில் பல புதிய நிறுவனங்கள் வந்து மொய்க்க இருப்பதால், போட்டியும் மிகக் கடுமையானதாக இருக்கும்.

ஐ-பேட் சாதனத்தின் இரண்டாவது பதிப்பை புதிய வசதிகளுடன் கொண்டு வரவேண்டிய கட்டாயம் இதற்கு உள்ளது. தன் ஐ-போனை மேலும் சில நிறுவனங்களுடன் இணைந்து விற்பனைக்குக் கொண்டு வரலாம். கணனியைப் பொறுத்தவரை, தன் புதிய மேக் ஒப்பரேட்டிங் சிஸ்டத்தை அப்பிள் லயன் (Lion) என்ற பெயரில் கொண்டு வரும். இதனால் மேக் கணனியின் விலை அதிகமாகும். இதில் ஐ-பேடில் உள்ள சில வசதிகளை இணைக்க அப்பிள் முயற்சித்து வருகிறது.

அடுத்து அப்பிள் இன்னும் வலுவலக ஊன்றாத இருபிரிவுகளில், இந்த ஆண்டில் செயற்படும் எனத் தெரிகிறது. அவை கிளவ்ட் கணனி மற்றும் சோஷயில் நெட்வோர்க்கிங். இவற்றையடுத்து வெளிநாடுகளில் விற்பனை செய்து வரும் அப்பிள் டிவியை, இன்னும் மலிவான விலையில் அதிக எண்ணிக்கையில் மக்களிடம் கொண்டு செல்ல அப்பிள் முயற்சிக்கும்.

### கூகுள்

தேடல் பிரிவில் தனக்கு நிகரில்லை என இயங்கும் கூகுள்,தற்போது பல திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இதன் முக்கிய போட்டியாளரான மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் பிங் சேர்ச் இன்ஜினுக்கு தன் வாடிக்கையாளர்கள் சென்றுவிடாமல் இருக்க, பல புதிய வசதிகளைத் தரவேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இதனுடைய அண்ட் ராய்ட் சிஸ்டம் பெரிய வெற்றியை அடைந்தாலும் ஐ-போன் சொப்ட்வெயார் போல நகாசு வேலைகளை தருவதாயில்லை. டேப்பிலட் பிசிக்கான அண்ட் ராய்ட் பதிப்பு ஐ-பேட் சாதனத்திற்கு சவால் விடுவதாய் அமையலாம்.

2011 இல் கூகுள் பேர்சனல் கணனி ஒப்பரேட்டிங் சிஸ்டம் பிரிவில் தன் நிலையை உறுதிப்படுத்தலாம். கிளவ்ட் கொம்ப்யூட்டிங் சிஸ்டத்தில் இயங்கும்படி ஒப்பரேட்டிங் சிஸ்டம் ஒருபிரவுசராக வலுப்பெறலாம். பயனாளர்கள் இதன்மூலம் இணைய சேர்வரில் உள்ள அப்பிளிகேஷன் புரோகிராம்களை பயன்படுத்துவார்கள். தங்கள் பைல் களைக் கூட, கிளவ்ட் கொம்ப்யூட்டிங் முறையில் இணையத்தில் சேர்வரில் சேமித்து வைத்து தேவைப்படும் போது எடுத்துப் பயன்படுத்துவார்கள். இந்தப் பணிகளுக் கெல்லாம் உதவிடும் வகையில் கூகுள் நிறுவனம் பேர்சனல் கணனி ஒப்பரேட்டிங் சிஸ்டத்தில் மாற்றத்தினைக் கொண்டு வரும். இதே போல இதுவரை தீவிரமாக இறங்காத, சோஷியல் நெட்வோர்க்கிங் பிரிவிலும் கூகுள் இந்த ஆண்டில் தடம் பதிக்கலாம். கூகுள் டிவியிலும் கவனத்தைச் செலுத்தி, இன்டர்நெட்டை டிவியில் நம் வீட்டுக்கு ஹோலுக்கு கொண்டுவரலாம்.

### மைக்ரோசொப்ட்

சொப்ட்வெயர் பிரிவில் சக்கரவர்த்தியாகத் திகழும் மைக்ரோசொப்ட் இன்னும் வாடிக்கையாளர்களை எல்லாப் பிரிவுகளிலும் தன் வசம் வைத்துள்ளது. விண்டோஸ், ஒபீஸ் மற்றும் எக்ஸ் பொக்ஸ் இதற்கு எடுத்துக்காட்டாகும். ஆனால் இரண்டு பிரிவுகளில் ஸ்மார்ட் போன் மற்றும் டேப்பிளட் பிசி, மற்ற நிறுவனங்களிடமிருந்து சவால்களை எதிர்கொண்டுள்ளது. விண்டோஸ் போன் ஏழு சிறப்பான சிஸ்டமாக இருந்தாலும் போட்டியை சமாளிக்கும் அளவிற்கு விரிவாக இல்லை.

### பேஸ்புக் மற்றும் டுவிட்டர்

சோஷியல் நெட்வோர்க்கிங் பிரிவில் இந்த இரட்டையர்கள், 2010ஆம் ஆண்டில் சிறப்பான முன்னேற்றத்தினை பெற்றனர். இந்தஆண்டிலும் சவால்களை சந்தித்து பல புதிய பரிமாணங்களை தங்கள் சேவையில் கொள்வார்கள் என எதிர்பார்க்கலாம்.

# மெமரி அளவு

பிட், பைட் என்ற அளவு குறித்து அனைவரும் அறிந்திருப்பீர்கள். பெரிய அளவுகளில் பேட்டாக்கள் அடையும் போது, அவற்றின் அலகுச்சொற்கள் என்னவென்று, சட்டென நமக்கு நினைவிற்கு வராது. சிடி ரம், ஹாாட் ட்ரைவ், யு.எஸ்.பி. பிளாஷ்ட்ரைவ், டிவிடி ரம், புளூ ரே டிஸ்க் ஆகியற்றின் அளவுகளைக் குறிக்கையில், இந்த அலகுச்சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. கிலோ பைட், கிகா பைட், டெரா பைட் அளவில் நாம் ஓரளவு இவற்றை உணர்கின்றோம். அதற்கும் மேலாகவும் அலகுச் சொற்கள் வந்துள்ளன. எனவே அவற்றை இங்கு காணலாம்.

ஒருகிலோபைட்(Kilobyte)=1,024பைட்ஸ்

ஒரு மெகா பைட் (megbyte)= 1,024 கிலோ பைட்ஸ்

ஒரு கிகா பைட் (gigabyte)=1,024 மெகா பைட்ஸ், ஒரு டெரா பைட்(terabyte)= 1,024 கிகா பைட்ஸ்

ஒரு பெட்ராபைட் (petta byte)= 1,024 டெரா பைட்ஸ்


ஒரு எக்ஸா பைட் (exa byte)= 1,024 பெட்டா பைட்ஸ்

ஒரு ஸெட்டா பைட்(zetta byte)= 1,024 எக்ஸா பைட்ஸ்

ஒரு யோட்டா பைட் (yotta byte)= 1,024 ஸெட்டா பைட்ஸ்

கணனிக் கணக்கில் ஒரு கிலோ என்பது 2 டு த பவர் ஒப் 10 (2 ^ 10) அதனால் தான் 1,024 எக் கிடைக்கிறது. ஒரு சிலர் இதனை 10 டு த பவர் ஒப் 3 (10 ^3) என எடுத்துக்கொள்கிறார்கள். ட்ரைவ்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள் கூட இதுபோல சமயங்களில் எடுத்துக் கொள்வதால் தான், நமக்கு 1,024 க்குப் பதிலாக 1,000 கிடைக்கிறது.

# திரோட் சகல துறையிலும் ஜொலிப்பு; இங்கிலாந்து அணிக்கு முதல் வெற்றி



(அடிலெய்ட்)

திரோட்டின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் நான்காவது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன் மூலம் அவுஸ்திரேலிய அணியின் தொடர் வெற்றிக்கு இங்கிலாந்து அணி முட்டுக்கட்டை போட்டது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 05 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடர், 02 இருபது-20 போட்டிகள், மற்றும் 07 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

இதில் ஆஷஸ் டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி 3:1 என்ற கணக்கில் கைப்பற்றியதுடன் இருபது-20 தொடரில் இரு அணிகளும் தலா ஒன்றில் வெற்றிபெற்றன.

தொடர்ந்து நடைபெற்ற முதல் மூன்று ஒருநாள் போட்டிகளிலும் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி 3:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இந்நிலையில் நான்காவது ஒருநாள் போட்டி நேற்று அடிலெய்ட்டில் நடைபெற்றது. இப் போட்டியில் வெற்றிபெற்றாக வேண்டிய கட்டாயத்தில் இங்கிலாந்து அணி களமிறங்கியது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி திரோட்டின் சிறப்பான சதத்தின் மூலம் 50 ஓவர்களில் 08 விக்கெட்டுக்களை யிழந்து 299 ஓட்டங்களை எடுத்தது.

இதில் திரோட் 126 பந்துகளில் (06 பவுண்டரிகள் உட்பட) 102 ஓட்டங்களையும் பிறிர் 58 பந்துகளில் (08 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 67 ஓட்டங்களையும் யார்டி ஆட்டமிழக்காமல் 39 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் டேவிட் ஹசி 04 விக்கெட்டுக்களையும் சிமித் 03 விக்கெட்டுக்களையும் பிரட் லீ ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 07 விக்கெட்டுக்களையிழந்து 278 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் ஷேன் வோட்ஷன் 72 பந்துகளில் (05 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 64 ஓட்டங்களையும், சிமித் ஆட்டமிழக்காமல் 46 ஓட்டங்களையும், வைட் 44, பிரட் லீ ஆட்டமிழக்காமல் 39 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அன்டர்ஸன், திரோட் ஆகியோர் தலா 02 விக்கெட்டுக்களையும், சாசட், திரிம்லெட், கொலின்வூட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இவ் வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி தொடரின் முதலாவது வெற்றியை பதிவுசெய்தது.

இப் போட்டியில் இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு வழிசமைத்த திரோட் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

# பாகிஸ்தான்- நியூசிலாந்து போட்டி மழை குறுக்கீட்டால் கைவிடப்பட்டது

(குயின்ஸ்டவுன்)

பாகிஸ்தான்- நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டுள்ளது.

குயின்ஸ்டவுன் நகரில் நேற்று நடைபெற்ற இப் போட்டியில் பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அவ்வணி 4.2 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 31 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மழையின் குறுக்கீட்டால் ஆட்டம் கைவிடப்பட்டது. இதில் அஹமட் ஷெஹஸாட் 16 பந்து வீச்சுக்களில் 25 ஓட்டங்களையும் மொஹமட் ஹாபிஸ் 04 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

06 போட்டிகள் கொண்ட இத் தொடரின் முதல் போட்டியில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றிருந்தது. 03வது போட்டி நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

# இலங்கை-மேற்கிந்தியத் தீவுகள் மோதும் ஒருநாள் தொடர் எஸ்.எஸ்.சிக்கு மாற்றம்

(கொழும்பு)

இலங்கை- மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள ஒருநாள் கிரிக்கெட் தொடர் எஸ்.எஸ்.சி மைதானத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபையின் ஊடக முகாமையாளர் பிரையன் தோமஸ் தெரிவித்தார்.

ஜனவரி 31ஆம் திகதி இத் தொடர் ஆரம்பமாகவுள்ளது.

ஆர். பிரேமதாஸ அரங்கு மற்றும் ஹம்பாந்தோட்டை அரங்கு ஆகியவற்றில் இப் போட்டிகள் நடைபெறவிருந்தன. எனினும் உலகக்கிண்ணப் போட்டிகளுக்காக இவை சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலிடம் உத்தியோக பூர்வமாக ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதனால் விதிகளின்படி அங்கு வேறு போட்டிகளை நடத்த அனுமதியில்லை என பிரையன் தோமஸ் தெரிவித்தார்.

இலங்கை-மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான போட்டிகள் விபரம்,

ஜனவரி31 முதலாவது ஒருநாள் போட்டி.

பெப்ரவரி 04 இரண்டாவது ஒருநாள் போட்டி.

பெப்ரவரி 06 மூன்றாவது ஒருநாள் போட்டி.

# கொழும்பு- தூத்துக்குடி கப்பல் சேவை சில வாரங்களில்

(கொழும்பு)

கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையிலான கப்பல் சேவை எதிர் வரும் சில வாரங்களுள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா தெரிவித்துள்ளார்.

இந்திய குடியரசு தினத்தை முன்னிட்டு பத்தரமுல்லையில் உள்ள இந்திய அமைதிகாக்கும் படையினரின் நினைவகத்தில் அஞ்சலி செலுத்திய தன் பின்னர் செய்தியாளர்களிடம் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மற்றும் தமிழக மக்களிடையேயான உறவுகள் மேம்படும் வகையில் இந்தக் கப்பல்சேவை நடத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை கொழும்புக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையிலான கப்பல் சேவை அடுத்த வாரம் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு இரண்டு தடைவைகள் விஜயம் மேற்கொண்டிருந்தமை இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்த இலகுவாக இருந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில் இலங்கையில் இந்தியாவின் இரண்டு கன்சியுலட் காரியாலயங்களை திறக்கக் கூடியதாக இருந்ததாகவும் இவர் சுட்டிக்காட்டினார்.

(ச-5)

# ஆஸி.ஓபன் டென்னிஸ்; ரபெல் நடால் வெளியேறினார்

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியன் ஓபன் டென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் உலகின் நம்பர்-1 வீரரான ஸ்பெயினின் ரபெல் நடால் தோல்வி அடைந்து வெளியேறினார். இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே, பெல்ஜியத்தின் கிம் கிளைஸ்டர்ஸ் உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்கள் அரையிறுதிக்கு முன்னேறினர்.

மெல்பேர்னில் அவுஸ்திரேலியன் ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதில் நேற்று நடந்த ஆண்கள் ஒற்றையர் காலிறுதியில் ஸ்பெயினின் ரபெல் நடால் சக நாட்டைச் சேர்ந்த டேவிட் பெரரை எதிர்கொண்டார். இதில் அபர ஆட்டத்தை வெளிப்படுத்திய டேவிட் பெரர் 6-4,6-2,6-3 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

இதன்மூலம் டேவிட் பெரர் 2வது முறையாக கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடரின் அரையிறுதிக்கு முன்னேறினார். முன்னதாக கடந்த 2007ல் நடந்த யு.எஸ்.ஓபன் தொடரில் அரையிறுதிக்கு முன்னேறினார். தவிர இவர் நடாலுக்கு எதிராக 4வது முறையாக (15போட்டி) வெற்றி பெற்றுள்ளார்.

**காயம் காரணம்**

ரபெல் நடாலின் அதிர்ச்சி தோல்விக்கு தொடைப் பகுதியில் ஏற்பட்ட காயம் முக்கிய காரணம். இப்போட்டியின் முதல் செட்டின் போது இவரது இடது கால் தொடைப் பகுதியில் ஏற்பட்ட காயத்திற்கு நடுவரின் அனுமதியுடன் முதலுதவி மேற் கொண்டார். இருப்பினும் கடைசி வரை போராடிய நடால் ஒரு செட்டை கூடகைப் பற்ற முடியாமல் தோல்வியடைந்தார்.

இதன் மூலம் நடாலின் கேரியர் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வெல்லும் வாய்ப்பு வீணானது. இவர் கடந்த ஆண்டு நடந்த பிரெஞ்ச் ஓபன் யு.எஸ். ஓபன் மற்றும் விம்பிள்டன் தொடரில் சம்பியன் பட்டம் வென்றிருந்தார். இம்முறை அவுஸ்திரேலியன் ஓபனில் பட்டம் வெல்லும் பட்சத்தில் கேரியர் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற வீரர் என்ற வரலாறு படைத்திருக்கலாம்.

கடந்த ஆண்டு இங்கிலாந்தின் ஆன்டி முர்ரேவுக்கு எதிராக நடந்த இத்தொடரின் காலிறுதியில் முழங்கால் காயம் காரணமாக பாதியில் விலகினார்.



2010ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தில் நடைபெற்ற வட மாகாண ஆங்கில தினப் போட்டியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களையும், கல்லூரியின் அதிபர் மற்றும் மாணவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் மேலுள்ள படத்தில் காணலாம். ஆங்கில மொழிதினப் போட்டியில் மாகாண மட்டத்தில் கலந்துகொண்ட இக் கல்லூரியின் மாணவர்கள் அனைவரும் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணக் கல்லூரி ஆறு முதலிடங்களையும், இரண்டு இரண்டாமிடங்களையும், பெற்றுக்கொண்டது. குழுப்பாடல் வாய்மொழி, தனி நடிப்பு, சொல்வதெழுதல், சிந்தனைக் கட்டுரை ஆகிய போட்டிகளில் இம் மாணவர்கள் இடங்களைத் தட்டிச் சென்றனர்.

# மோதலுக்குப் பின்னரான அறிக்கையிடல் ஊடகவியலாளர்களுக்கு கையேடு

(கொழும்பு)


மோதலுக்குப் பின்னரான விடயங்களை அறிக்கையிடல் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு வழிகாட்டல் கையேடு ஒன்றை இலங்கையிலுள்ள சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் மற்றும் புத்திஜீவிகளை கொண்டு ஐ.பி.டி.சி.ஃயுனஸ்கோ செயற்திட்டத்தின் கீழ் இலங்கை இதழியல் கல்லூரி மற்றும் இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனம் என்பன இணைந்து தயாரித்துள்ளது.

இதன் வெளியீட்டு வைபவம் நேற்று புதன்கிழமை மாலை இலங்கை இதழியல் கல்லூரியில் இடம்பெற்றது. இதன் போது டெய்லிமிரர் பத்திரிகையின் சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஆலோசகருமான எம்.எஸ்.எம்.ஐயூப் தலைமையில் குழுக் கலந்துரையாடலும் இடம்பெற்றது.

இக் குழுக் கலந்துரையாடலில் சுதந்திர ஊடக இயக்க அமைப்பாளரான சுனில் ஜயசிரி, இலங்கை தமிழ் ஊடகவியலாளர் சங்கப் பிரதித் தலைவர் ஏ.நிஷன், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவரும் நவமணி பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான என்.எம்.அமீன், தெற்காசியப் பெண்கள் ஊடக அமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் திலருஷ ஹந்துன் நெத்தி மற்றும் இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்க பதில் தலைவர் கணசிறி கொத்திக்கொட ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ச-5)






இந்தியாவின் 62ஆவது குடியரசு தினம் நேற்று யாழ்ப்பாணத்திலும் கொண்டாடப்பட்டது. யாழ்ப்பாணத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ள இலங்கைக்கான இந்தியத் துணைத்தூதராலயத்தில் இந் நிகழ்வுகள் இடம்பெற்றன. இந் நிகழ்வில் வடக்கு மாகாணத்தில் வசிக்கின்ற இந்தியப் பிரஜைகள் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்ட இந்தியப் பிரஜைகளையும், துணைத்தூதுவர் மகாலிங்கம், இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டீலின் செய்தியை வாசிப்பதையும் படங்களில் காணலாம்.

# நோர்வே அனுசரணையில் 'யாழ்ப்பாண இசைவிழா 2011'

(கொழும்பு)

நோர்வேயின் அனுசரணையுடன் யாழ்ப்பாண இசை விழா 2011 என்னும் தொனிப் பொருளில் கலாசார ரீதியான நாட்டுப்புறக் கலைகளின் கொண்டாட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் 25முதல் 27ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது. இவ்விழா குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று கொழும்பில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் இந்நிகழ்வின் இணைப்பாளர் ஜான் ரமேஷ் டீ சேரம், சேவாலங்கா மன்றத்தைச் சேர்ந்த தமிழகன் தனபாலசுந்தரம் இலங்கைரூபவாஹினிகூட்டுத்தாபன அதிகாரி பிரசன்ன ஜெயசுந்தர, ஆலோசகர் லக்ஸ்மன் ஜோசப் டீ சேரம், கலை இயக்குநர் அருந்ததி ஸ்ரீ ரங்கநாதன் ஆகியோர் இவ் விழா குறித்து விளக்கமளித்தனர்.

வழக்கொழிந்து போய்க்கொண்டிருக்கும் கிராமிய கலைகளுக்கு மீண்டும் உயிரோட்டத்தை ஏற்படுத்துவது, மறைந்துகிடக்கும் கலைஞர்களை இக்கலைகளை மேடையேற்றுவதனூடாக வெளிக்கொணர்வது, இளைஞர்களுக்கு கலாசார பண்பாட்டு தோன்றல்கள் தொடர்பான அறிவினை ஏற்படுத்துவது, ஊடகங்கள் மற்றும் திரைப்பட தயாரிப்பாளர்கள் நாட்டுப் புறக்கலைகளை ஆவணப்படுத்தி அவற்றினை பாதுகாக்கச் செய்தல்.

இனிவரும் சந்ததிக்கு இந்த கலைகளை எடுத்துச் செல்லல் போன்றவற்றை அடிப்படை நோக்கமாகக் கொண்டு இந்த இசை விழா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

நாட்டின் அனைத்துப் பிரதேசங்களையும் உள்ளடக்கிய கிராமிய பண்பாட்டு நாட்டுப்புற கலை நிகழ்வுகள் இதன்போது மேடையேற்றப் படவுள்ளன.

அத்துடன் இந்தியா, நேபாளம், பாலஸ்தீனம், நோர்வே, தென்னாபிரிக்க ஆகிய 5 நாடுகளின் கலைஞர்களும் தங்களுடைய பாரம்பரிய கலைகளையும் இவ்விழாவில் மேடையேற்றவுள்ளனர். (ச-5)

# இலங்கை...

இதனால் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்களை நாடு கடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் சுவிட்சர்லாந்து குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

வன்னிப் பிரதேசத்தைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கு புகலிடம் வழங்கப்பட மாட்டாது என சுட்டிக்காட்டியுள்ளது.

2011ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் ஒவ்வொரு புகலிடக் கோரிக்கையாக பரிசீலனை செய்யத் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

2200 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் சுவிட்சர்லாந்தில் அடைக்கலம் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# மீண்டும் மத்தியஸ்தத்து...

அண்மையில் சர்ச்சைக்குரிய விக்கிலீக்ஸ் வெளியிட்ட தகவல்களின் மூலம் இந்த உண்மை உறுதி செய்யப்பட்டுள்ளது. தனித் தமிழீழ கோரிக்கைக்கு நான் ஆதரவளிக்கப் போவதில்லை.

பேச்சுவார்த்தைகளின் மூலம் ஜனநாயக அடிப்படையில் புலம்பெயர் தமிழர்கள் தமது இலக்குகளை அடைய முனைப்பு காட்ட வேண்டும்.

இலங்கைக்கு விஜயம் செய்வது குறித்த இறுதித் திகதிகள் இன்னமும் நிர்ணயிக்கப்படவில்லை. இறுதிக் கட்ட யுத்தத்தின் போது மக்கள் பாதிப்புக்களை எதிர்நோக்கினர். இந்த பாதிப்புகளுக்கு இரு தரப்பினரும் பொறுப்பு சொல்ல வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் வேறு வழியைத் தெரிவு செய்திருந்தால் பிரச்சினைக்கான தீர்வு முடிபில் மாற்றம் கண்டிருக்கலாம் என எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். (ச-5)

# அழைப்புக் கிடைத்தது...

பட்ட இந்த ஆணைக்குழுவில் சாட்சியம் அளிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு அழைப்புக் கடிதம் அனுப்பபட்டது. அதற்குப் பதிலளித்திருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா இது தொடர்பாக தான் ஆராய்ந்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

சந்திரிகா குமாரதுங்கவின் இந்த சாதகமான பதில் அவர் விரைவில் சாட்சிய மளிக்க வருவார் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் எதிர்க்கட்சி தலைவர் தரப்பிலிருந்து எந்த பதிலும் இதுவரை கிடைக்கவில்லை எனவும் லக்ஸ்மன் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழு நாட்டின் பல பகுதிகளிலும் தமது அமர்வை நடத்தி சாட்சியங்களை பெற்று வருகின்றது. கொழும்பில் நடைபெறும் அமர்வுகளில் அரசியல்வாதிகள், இராஜதந்திரிகள், மதத்தலைவர்கள் முக்கிய பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் சாட்சியமளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதேநேரம் எதிர்வரும் 31ஆம் திகதியுடன் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் நிறைவடையவுள்ளன எனவும் சில உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-1)

# வல்வெட்டித்துறை நகர...

செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் இன்னமும் நடைமுறையில் உள்ளது.

இந்நிலையில் கூட்டமைப்பும் தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் புளொட் ஆகியவற்றை சேர்த்துக்கொண்டதுடன் எம்மை நிராகரித்தது.

இதனால் நவசமாச கட்சியின் சார்பில் அவர்களின் மேசை சின்னத்தில் போட்டியிடும் தீர்மானத்தில் நாம் இருந்தோம்.

இந்த சந்தர்ப்பத்தில் கூட்டமைப்பின் அழைப்பு எமக்குக் கிடைத்திருக்கிறது. எனவே தமிழ் கட்சிகளின் ஒற்றுமைக்கு கிடைத்துள்ள நல்லதொரு சந்தர்ப்பத்தை நாம் தவறவிடத் தயாராக இல்லை. தமிழ் மக்களின் அவலங்கள், சோதனைகளை போக்க கூட்டாக இணைய வேண்டியுள்ளது. எனவே கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடத் தயாராகியுள்ளோம். இதேவேளை நவசமாச கட்சி சார்பில் நாம் போட்டியிடவிருந்த சகல பிரதேச சபைகளிலிருந்தும் நாம் விலகிக்கொள்கிறோம்.

குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் மூன்று பிரதேச சபைகளில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களை நாம் தாக்கல் செய்துள்ளோம். அவற்றிலிருந்தும் நாம் விலகிக்கொள்கிறோம் என சிவாஜிலிங்கம் மேலும் கூறினார். (ச-5,6)

# 'போரை வென்ற அனு...

சுமார் 54 நாடுகளைச்சேர்ந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், வாண்மையாளர்கள், புலமையாளர்கள் கலந்துகொள்ளவுள்ள இந்தக் கருத்தரங்கில் புதுடில்லியிலிருந்து சுமார் 30 பாதுகாப்பு உயர் அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர் என்றும் இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜெயசூரிய தெரிவித்தார்.

இராணுவத் தலைமையகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

21ஆம் நூற்றாண்டில் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டிய நாடுகளில் இலங்கை இடம் பிடித்துள்ளதுடன் உலக நாடுகள் மத்தியில் பெரும்பாராட்டையும் பெற்றுள்ளது. அந்தவகையில் பயங்கரவாதத்தை இல்லா தொழித்த பெருமை இலங்கைப் படையினரை சார்ந்துள்ளது.

இந் நிலையில் பயங்கரவாதத்தின் பிடியில் சிக்குண்டுள்ள நாடுகள் அதிலிருந்து மீண்டுவருவதற்கு பயங்கரவாதத்தை வெற்றிகொண்ட நாடொன்றின் அனுபவம் மிகவும் பயனுடையதாக இருக்கும். இதனால் இலங்கை தனது அனுபவத்தை சர்வதேச நாடுகளுடன் பகிர்ந்து கொள்வதற்கான நடவடிக்கைகளை தற்போது முன்னெடுத்துள்ளது.

இதற்காக பயங்கரவாதத்தின் பிடியில் சிக்குண்டுள்ள நாடுகள் மற்றும் இலங்கை இராணுவத்துடன் தொடர்புகளை பேணிவரும் நாடுகள் என தெரிவுசெய்யப்பட்ட சுமார் 54 நாடுகள் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்ளவுள்ளன. இந் நாடுகளுக்கான அழைப்பிதழ்கள் பாதுகாப்புச் செயலாளரினால் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

வன்னி மற்றும் கிழக்கில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமான நடவடிக்கைகள் மற்றும் யுத்தத்தின் பின்னரான மீள்குடியேற்றம், புனர்வாழ்வு நடவடிக்கைகள், கண்ணிவெடிகளை அகற்றுதல், இணக்கப்பாட்டுடனான நடவடிக்கைகள், நாட்டைக் கட்டியெழுப்புதல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இக் கருத்தரங்கில் கவனம் செலுத்தப்படவுள்ளன.

அத்துடன் இலங்கையில் அணுகுமுறை வழமையான அணுகு முறைகளிலிருந்து எவ்வாறு வேறுபட்டது மற்றும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தோற்கடிப்பதில் இலங்கை எவ்வாறு வெற்றிபெற்றது என்பன தொடர்பிலும் இந்த கருத்தரங்கின் போது ஆய்வு செய்யப்படவுள்ளன.

இதேவேளை, வினைத்திறன் மிக்க பயங்கரவாத எதிர்ப்பு, தந்திரோபாயம், செயற்பாடு, தந்திரோபாயம் தொடர்பில் கற்றுக்கொண்ட பாடங்கள், விசேட தேவைகுறித்த பயிற்சிகள், பயங்கரவாதத்தை தோற்கடிக்கும் செயன்முறையில் மனித உரிமையாளர்களின் பாத்திரங்கள், அரசியல் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவுள்ளன என அவர் கூறினார். (ச-5)

# மரண அறிவித்தல்

## திருமதி காசிநாதர் சிவகாமசுந்தரி



கல்வயலை பிறப்பிடமாகவும் மட்டுவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காசிநாதர் சிவகாமசுந்தரி 26/01/2011 புதன்கிழமை மாலை 3.00 மணியளவில் திருநெல்வேலியில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மானாவளை கணபதிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட மகளும் காலஞ்சென்ற கந்தர் காசிநாதரின் (ஓய்வுபெற்ற அதிபர், மட்டுவில் சந்திரமௌலீஸ்வர வித்தியாலய தர்மகர்த்தாவும் ) அன்பு மனைவியும் ஆவார்.

பாலசுப்பிரமணியம், சறோஜினிதேவி, அமரர் ஈஸ்வரிதேவி, சிவபாலன் (தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானம் ),சிவகடாச்சம் (கடாபி பிரசன்னா லொறி உரிமையாளர்), சிவஞானசுந்தரம் (முகாமையாளர், திருக்கணித பதிப்பகம், சாவகச்சேரி ),கிருபாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

புஸ்பகாந்தி, தவராஜா, தவரத்தினம், மனோன்மணி, விமலினி, அமரர் சண்முகானந்தம் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அரவிந்தன்-வள்ளிநாயகி, அனுஷா-ஜெகதீஸ்வரன், அமுதா-யோககிரிநாதன், அஜந்தன்-தயாளினி, உமா-சத்தியேந்திரன்(தாதிய உத்தியோகத்தர், யாழ் போதனா வைத்தியசாலை), சுகிர்தா-சர்வநாதன் (சுவிஸ்), சுதன் (சுவிஸ்), சுரேகா, அபிராமி-சதீஸன், ஆரணி, தாரணி, மயூரதன், பிரசன்னா, பிரவீணா-லம்போதரன் (சுவிஸ்), பிரதீபா-யோகானந்தன் (லண்டன்), பிரபூர்ணா, பிரணவி, குமணன்-நிரோஷினி (பிரான்ஸ்) ஸ்ரீரமணன்-தர்ஷினி (சுவிஸ் )ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளும் சிவக்கிரியைகளும் இன்று (27/01/2011 வியாழக்கிழமை)நண்பகல் 12 மணியளவில் பலாலி வீதி திருநெல்வேலி வடக்கில் அமைந்துள்ள உமாசத்தியேந்திரனின் தற்காலிக இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு அன்னாரின் பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

3-ம் கட்டை பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு.

மகன்
கா.சிவபாலன்

6

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.